விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 15 சனிக்கிழமை (31.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317

## நல்லூர், வேலணை, உடுவில், புங்குடுதீவைச் சேர்ந்த 6 பேருக்கு யாழில் கொரோனா உறுதி

### முல்லையிலும் இருவருக்கு தொற்று

போதனா பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 6 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர், வேலணை, புங்குடுதீவு, உடுவில் பகுதிகளைச் சேர்ந்த 6 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 2 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை வந்தடைந்தார் புதிய சீனத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் புதிய தூதுவர் ட்சீ சென்ஹொங் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

பி.சி.ஆர்.பரிசோதனையினை நிறைவு செய்து சீன ஈஸ்டன் ஏயார்லைன்ஸ்க்கு சொந்தமான எம்.யு 231 விமானம் ▷23

## நேற்று மட்டும் 633 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நேற்று மட்டும் 633 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை இரவு கண்டறியப்பட்டுள் ▷23

## பொது சுகாதார பரிசோதகர் போல் வேடம் தரித்து

### வீட்டிலுள்ளவர்களுக்கு தூக்க மாத்திரை கொடுத்து பணம், நகை கொள்ளை

(கொழும்பு)

பொது சுகாதார பரிசோதகர்கள் போல் வேடம் தரித்து மூன்று பேர் வீடொன்றில் கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று குருநாகல் அம்பான்பொல பகுதியில் பதிவாகியுள்ளது.

குறித்த கொள்ளை ▷23

## கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த யாழில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிப்பு

### மாவட்ட செயலணி கூட்டத்தில் தீர்மானம்



- 50 பேருடன் வீட்டிலேயே திருமணம்.
- 25 பேரே மரணச் சடங்குக்கு அனுமதி.
- தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கத் தடை
- திறந்த சந்தைக்கு அனுமதி இல்லை.
- மக்கள் சந்திப்பு, பொது நிகழ்வு, விளையாட்டு போட்டிகளுக்குத் தடை.
- உணவகங்களில் இருந்து உணவு உண்பதற்கு தடை.
- ஆலயங்களில் மதகுருமார்களுக்கு மட்டும் அனுமதி.

(23ஆம் பக்கம் பார்க்க)

## சூம் தொழில்நுட்பத்தில் டென்மார்க் மாப்பிள்ளையுடன் யாழ்.யுவதிக்கு திருமணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் யுவதி ஒருவருக்கும் டென்மார்க்கிலுள்ள புலம்பெயர் தமிழ் இளைஞருக்கும் நேற்று முனதினம் சூம் தொழில்நுட்பத்தில திருமணம் இடம்பெற்றது.

இவ் வருட ஆரம்பத்தில் உரும பிராயை சேர்ந்த யுவதிக்கும் டென்மார்க்கில் ▷23

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் தொற்றாளர்கள்

## நாட்டின் தற்போதைய நிலைவரம் நம்பிக்கை தருவதாக இல்லை

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கவலை

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் எண்ணிக்கை 10 ஆயிரத்தை கடந்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் தற்போதைய நிலைவரம் நம்பிக்கை தரும் வகையில் இல்லை என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் ▷23

## ஊரடங்கின்போது திருமணம் தடுத்து நிறுத்திய பொலிஸார்

### சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஊரடங்கு சட்டம் அமுலில் இருநதபோது கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று நடத்தப்படவிருந்த திருமணம் பொலிஸாரினால் நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பதில் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார். ▷23

## மன்னாரில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது ஐந்து கிலோ ▷23

வயல் வேலையில் ஈடுபட்டிருந்த வேளை

# மின்னல் தாக்கியதில் தம்பதிகள் உயிரிழப்பு

## அம்பாறையில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் மின்னல் தாக்கியதில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கணவனும் மனைவியும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் திருக்கோவில் விநாயகபுரத்தில் இடம்பெற்றது.

விநாயகபுரம் தபாலக வீதியைச் சேர்ந்த லோகநாயகம் யோகேஸ்வரன் (வயது -46) அவரது மனைவி ஜெயசுதா (வயது-46) ஆகிய இருவருமே மின்னல் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள்.

தம்பதியினர் சாகாமம் கப்பித்தலாவ பகுதியிலுள்ள தமது காணியில் கச்சான் செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது மின்னல் தாக்கியுள்ளது.

சடலங்கள் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-03)


## குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.**

**மகேந்திரன் மயூரன்,**
இல. 284, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தற்போது
இல. 33, செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.
வழக்காளி.

வழக்கு இல : விஷேடம்/11/2020

எதிராக.

1. **A.E.ஆனந்தராசா,**
தலைவர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2. **கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

3. **இ.கி.அமல்ராஜ்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாநகரசபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

4. **மகிந்த தேசப்பிரிய,**
தலைவர்,
தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் திணைக்களம்,
இராஜகிரிய.

எதிராளிகள்.

மேற்படி இலக்க வழக்கின் 1-4 வரையான எதிராளிகளுக்கு எதிராக வழக்காளியினால் 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச் செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலிதற்றது என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை முறைக்கோவையின் 16 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.
இவ்வழக்கானது எதிர்வரும் 06.11.2020 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திறந்த மன்றில் அழைக்கப்பட இருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி.

2020 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 29 ஆம் திகதி

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-604)


# பாராளுமன்ற பேரவைக்கான உறுப்பினர்களை பெயரிடுக

## பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் சபாநாயகர் மகிந்த யாப்பா அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற பேரவைக்கான உறுப்பினர்களை பெயரிடுமாறு பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து, அரசியலமைப்பு சபை இரத்தானதால், அதற்கு பதிலாக பாராளுமன்ற பேரவையே உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், சகல சுயாதீன ஆணைக்குழுக்களின் நியமனங்களுக்கான கண்காணிப்பினை மேற்கொள்ளும் நடவடிக்கை பாராளுமன்ற பேரவையினூடாக முன்னெடுக்கப்படும்.

எவ்வாறாயினும், அந்த கண்காணிப்பின் மூலம் விடுக்கப்படும் எதிர்ப்பு அல்லது ஆதரவை கவனத்திற்கொள்ளாமல் செயற்பட 20 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. (ம-03)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட

# மீன் சந்தை வியாபாரிகளிடம் எழுமாற்றாக பி.சி.ஆர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகளில் மீன் வியாபாரம் செய்வோரில் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட 30 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தையை தொடர்ந்து திருகோணமலை மீன் சந்தையில் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் சிலரில் கொரோனா தொற்று இனம் காணப்பட்டதால் நுகர்வோர் இது தொடர்பில் அச்சம் கொள்வதனை தடுக்கும் நோக்கிலுமே பரிசோதனை மேற் கொளப்பட்டது. குருநகர், பாசையூர், சின்னக்கடை, நாவாந்துறை, கல்வியங்காடு உள்ளிட்ட 6 மீன் சந்தைகளில் இருந்து தலா 5 பேர் எழுமாற்றாக தேர்வு செய்யப்பட்டு முதல் கட்டமாக இந்தப் பரிசோதனை இடம்பெற்றது.

இவ்வாறு மேற்கொண்ட பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று இல்லை என்றால், தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சந்தைகள் இயங்கும். இவ்வாறான பரிசோதனைகள் அடுத்த கட்டமாக மரக்கறி சந்தைகள் மீதும் தொடர்வது தொடர்பிலும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. (ம-03)

# துப்பாக்கி மற்றும் வாள் மட்டக்களப்பில் மீட்பு !

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- சவுக்கடி பிரதேசத்தில், உள்ளூர் துப்பாக்கி ஒன்றும் வாள் ஒன்றும் மாவட்ட குற்றவியல் பிரிவு பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் வாள் ஆகியவற்றை ஏறாவூர் பொலிஸாரிடம் குற்றவியல் பிரிவு ஒப்படைத்துள்ளது.

குற்றவியல் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினையடுத்து, நேற்று காலையில் மாவட்ட குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி டி.எஸ்.டி.பண்டார தலைமையில், பொலிஸ் சாஜன் அஜித், சுதி மில்சன், பண்டார, சந்தன, விஜயசிங்க ஆகியோர் கொண்ட பொலிஸ் குழுவினர் குறித்த பகுதியை சுற்றி சோதனையிட்டனர்.

இதன்போது அங்கு பற்றை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றையும் வாள் ஒன்றையும் மீட்டு, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்றவியல் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)

# சக்திவாய்ந்த நிலநடுக்கம் துருக்கியில் பதிவாகியது

(அங்காரா)

துருக்கியில் நேற்று இரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் சுனாமி அலைகளும் தாக்கியுள்ளது.

நேற்று துருக்கியின் மேல்மாகாணத்தின் இஸ்மிர் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவில் 7.0 ஆக பதிவாகியுள்ள நிலநடுக்கத்தினால் பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளது.

நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட இடத்தில் மீட்பு பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கையில் நிலநடுக்கம் காரணமாக சுனாமி பேரலைகளும் தாக்கியுள்ளது.

சுனாமி பேரலைகள் குறித்த பகுதியின் நகருக்குள் புகுந்துள்ளதால் பல அடி உயரத்திற்கு கடல் நீரால் நிறைந்துள்ளதையடுத்து பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் அறிய முடிகிறது. (ம-03)

# பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங்கள் செயலிழப்பு

# கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையில் பின்னடைவு

## அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

**பி.சி.ஆர். இயந்திரங்கள் பழுதடைந்தமையால் கொரோனா அலையை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பழுதடைந்த இயந்திரங்களை திருத்தியமைப்பதற்கு இங்கு ஆட்கள் இல்லாதமை பெரிய இழப்பாக காணப்படுகிறது.**



பி.சி.ஆர்.இயந்திரங்களை உடனடியாக திருத்துதல் மற்றும் புதிய பி.சி.ஆர். இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரும் செயற்பாட்டை அரசாங்கம் விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சஜித்பிரேமதாஸ மேலும் கூறியுள்ளதாவது,

"நாட்டுக்குள் பரவியுள்ள கொரோனா அலையை கட்டுப்படுத்தும் செயற்பாடு பின்னடைவை அடைந்துள்ளது.

நாட்டிலுள்ள பி.சி.ஆர்.இயந்திரங்கள் பழுந்தடைந்துள்ளமையே இதற்கான காரணமாக கருதப்படுகிறது. இந்த பி.சி.ஆர். இயந்திரங்கள் தரமானவையா? எனும் சந்தேகம் எழுந் துள்ளது.

இவை பழுதானால், அதனை திருத்தும் தொழில்நுட்பமும் ஆட்களும் இலங்கையில் இல்லாதமை பெரும் இழப்பாக காணப்படுகிறது.

இதனால், நாட்டு மக்கள் பெரும் சவாலுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். சுகாதார சேவையில்ஆட்பலமும் குறைந்துள்ளது.

எனவே, பி.சி.ஆர்.இயந்திரங்களை துரிதமாக திருத்துவதும், புதிய பி.சி.ஆர். இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவருவதும் அத்தியாவசியமாக காணப்படுகிறது.

இதனை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு நபரையும் இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளாது, அரசாங்கம் இந்த பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# அரசியல் நாகரிகம் அற்ற முறையில் மனோகணேசன் செயற்படுகிறார்

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மனோகணேசன் அரசியல் நாகரிகமற்ற முறையில், தனது தவறை மூடி மறைப்பதற்கு, அரசியல் கைதிகளின் விடுதலையை, துமிந்த சில்வாவின் விடுதலையுடன் ஒப்பிட்டு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான மனுவை கொடுப்போமா? என கேட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஓரிரு தினங்களுக்கு, துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்ட மனுவில் தானும் கைச்சாத்திட்டதாகவும், அது மூன்று வாரங்களின் முன்னர் இந்த சம்பவம் நடைபெற்றது. ஆனால், அது தற்போது நான் எதிர்பாராத விதமாக வெளிவந்துவிட்டது என்றும் மனோகணேசன் தொலைபேசியில் தெரிவித்தார்.

அந்த விடயம் வெளிவந்ததனால், சில சங்கடங்களும், சிக்கல்களும் ஏற்பட்டுள்ளதாக என்னிடம் தெரிவித்தார்.

அதை சமாளிப்பதற்கு, தமிழ் அரசியல் கட்சிகளின் விடுதலை தொடர்பான ஒரு மனுவை நாங்கள் சேர்ந்து கொடுத்தால் என்ன என என்னிடம் மனோகணேசன் கேட்டார்.

துமிந்த சில்வாவின் விடுதலை மனுவில் கைச்சாத்திட்டதிற்கான உண்மையான காரணத்தையும் அவர் என்னிடம் தெரிவித்திருந்தார்.

தனிப்பட்ட உரையாடலின் போது, அவர் அந்தக்காரணத்தை என்னிடம் சொன்னதனால், அதை பகிரங்கமாக சொல்ல விரும்பவில்லை.

அரசியல் நாகரிகத்தை அவர் பேணாவிட்டாலும், அந்த நாகரிகத்தை பேண நான் விரும்புகின்றேன்.

தமிழ் அரசியல் கைதிகள் தொர்டர்பில் அவர் சொன்னது, துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பான மனுவில் கையொப்பமிட்டதில் இருந்து தப்புவதற்கு, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான மனுவை முன் வைத்தால் என்ன என்று கேட்டார்.

அதற்கு நான் மறுத்து விட்டேன். மறுப்புத் தெரிவித்தமைக்கான காரணத்தையும் நான் சொல்லியிருந்தேன்.

தமிழ் அரசியல்வாதிகள் விடுதலை செய்யப்படுவது சரியான விடயம். அது செய்யப்பட வேண்டிய விடயம். துமிந்த சில்வாவை விடுதலை செய்வது தவறான விடயம்.

ஆகையினால், செய்யப்படக் கூடாத விடயத்தையும், கட்டாயம் செய்யப்பட வேண்டிய விடயத்தையும், ஒன்றாக காட்டுவது, மிக மிகத் தவறான செயற்பாடு.

சுனில் ரத்நாயக்கவிற்கு மன்னிப்பு கொடுக்கப்பட்ட போது கூட, தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யலாம் தானே என்றதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன்.

இந்த இரண்டு விடயங்களையும் சேர்க்கக்கூடாது. சுனில் ரத்நாயக்க விடுவிக்கப்பட்டது தவறான செயல். தவறான செயலை வைத்து, சரியான செயலை செய்வது, தவறான செயலையும், சரியானதென சொல்வதாக ஆகிவிடும்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது எங்களின் கோரிக்கை, தவறான செயலை செய்ததில் இருந்து தான் தப்பிக்க வேண்டும் என்று, அதனை ஒரு கருவியாக பயன்படுத்த நினைப்பது தவறு. அதற்கு இணங்கிப் போகக்கூடாது.

பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் யோசித்து விட்டுச் சொல்வதாக, தன்னிடம் கூறியதாக, மனோகணேசன் ஊடகங்களில் தெரிவித்திருந்தார்.


ஆனால், அடைக்கலநாதன், தான் அவ்வாறு சொல்லவில்லை. இரண்டு விடயங்களையும் சம்பந்தப்படுத்த வேண்டாம் என தெளிவாக சொன்னதாக, ஊடகங்களிடம் தெரிவிக்குமாறு என்னிடம் தெரிவித்தார்.

மனோகணேசன், துரதிர்ஷ்டவசமாக, தான் அகப்பட்ட அரசியல் சிக்கலில் இருந்து விடுபடுவதற்காக, இவ்வாறு பேசுவது பிழையான ஒரு விடயம். அவர் என்னிடம் தனிப்பட்ட விடயமாக பேசியதனால், சில விடயங்களை வெளிப்படுத்தவில்லை.

நாங்கள் தெரிவித்ததாக மனோகணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தமையினால், நானும், அடைக்கலநாதனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக, தெளிவான நிலைப்பாட்டை சொல்லியிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-101)

## புதிய அரசியலமைப்பால் சமூகம் பிளவுபடுமாயின் இன்னொரு அனர்த்தத்திற்கு முகம் கொடுக்க நேரிடும்

## - கரு எச்சரிக்கை -



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை முன்னிறுத்தி சமூகம் பிளவுபடுமாக இருந்தால், கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ளதைப் போன்ற மற்றுமொரு அனர்த்தத்தை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய எச்சரித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் மத்தியில் இடம்பெற்ற பொது விவாதம் அவர்களைத் திசைதிருப்பி விட்டதுடன் அதற்கு மத்தியில் கொரோனா வைரஸ் உயிரைக் காவுகொள்ளும் அதன் பயணத்தை மீள ஆரம்பித்துவிட்டது.

புதிய அரசியலமைப்பை முன்னிறுத்தி சமூகம் பிளவுபடுமாக இருந்தால், இதனையொத்த மற்றுமொரு அனர்த்தத்தை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

எனவே அனைத்துத் தலைவர்களும் ஒன்றுபட வேண்டிய தருணம் இதுவேயாகும். மாறாக பிரிவினை கொள்கையுடையவர்களைத் திருப்திப்படுத்த முயற்சிக்கக்கூடாது. உயிர்வாழ்தலே தற்போது முன்னுரிமைக்குரிய விடயமாகும்.

மேலும்தற்போது கொரோனா வைரஸ் நோயாளர்கள் மற்றும் அதனால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், மக்களின் பாதுகாப்பே அரசாங்கத்தின் அக்கறைக்குரிய விடயமாக இருக்கவேண்டும்.

பதற்றத்தில் பொருட்களை முண்டியடித்துக் கொள்வனவு செய்வதைத் தவிர்ப்பதற்கு மக்கள் மத்தியில் அத்தியாவசியப் பொருட்களை முறையாகப் பகிர்ந்தளிப்பது அவசியமாகும்.

அத்தோடு ஒவ்வொருவரும் தமது சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் கவனத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-4)

# நிலையான நகர்ப்புற அபிவிருத்தியினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்

## பிரதமர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

"மிகச் சிறந்த நகரம் மற்றும் மிகச் சிறந்த வாழ்க்கை" என்பதே உலக நகரங்கள் தினத்தின் பொதுவான கருப்பொருளாகும். நிலையான நகர்ப்புற அபிவிருத்தியின் ஊடாக நகரில் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்ல முடியும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்று வாழ்த்துக்கள் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒட்டு மொத்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக அடிப்படையில் நகர்ப்புறத்தில் மேற்கொள்ளப்படும் அடிப்படை சேவைகளின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 27 ஆம் திகதி உலக நகரங்கள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதற்கமைய 2014 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஒக்டோபர் 31 ஆம் திகதி உலக நகரங்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உலகளாவிய நகரமயமாக்கல் தொடர்பில் சர்வதேச சமூகத்தினர் கொண்டுள்ள ஆர்வத்தை மேம்படுத்தல், வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் நகரமயமாக்கலின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் போன்று நிலையான நகர்ப்புற அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல் என்பன இத்தினத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.



அனைத்து காரணிகளும் உள்ளடக்கப்பட்ட நகரமொன்றுக்குள் மனிதனின் வாழ்வு எளிதாக்கப்படும். அதேபோன்று அனைத்து தேவைகளும் பூரணப்படுத்தப்படும். நகர்ப்புறத்தை அழகுபடுத்தல், வீடமைப்பு திட்டங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக நாம் ஆட்சிக்கு வந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் நகர்ப்புற அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கினோம்.

நாட்டின் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மாத்திரம் முக்கியத்து வமளிப்பதிலிருந்து அப்பால் சென்று நாடளாவிய ரீதியில் நகரங்களுக்கிடையே சமமான அபிவிருத்தியை ஏற்படுத்துவது எமது நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# அத்தியாவசிய பொருட்கள் தேவையான அளவு கையிருப்பில்; முண்டியடித்து கொள்வனவு செய்வதை தவிர்க்கவும் - பந்துல

**(கொழும்பு)**

**கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மக்கள் தேவைக்கு அதிகமாக பொருட்களை கொள்வனவு செய்வதை முதலில் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தவும் அரச சேவையினை சீராக முன்னெடுக்கவும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒரு சில பிரதேசங்களில் மக்கள் பொறுப்பற்ற விதமாக செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.



ஊரடங்குச் சட்டம் முழு நாட்டுக்கும் மாதக் கணக்கில் அமுல்படுத்தப்படும் என தவறான வதந்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பொதுமக்கள் தேவைக்கு அதிகமாக பொருட்களை கொள்வனவு செய்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வசதி படைத்தோர் பொருட்களை கொள்வனவு செய்யும் போது சாதாரண மக்களை கருத்திற் கொள்ள வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களை தேவைக்கு மேலதிகமாக கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது. அத்தியாவசிய பொருட்கள் தேவைய்யான அளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என பந்துல தெரிவித்தார். (நி-4)

# ஆரையம்பதி ஆடைத்தொழிற்சாலை 3 தினங்கள் தற்காலிக நிறுத்தம்

(களுவாஞ்சிக்குடி)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மற்றும் மாவடி முன்மாரியில் கண்டறியப்பட்ட இரு கொரோனாத் தொற்றாளர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆரையம்பதியில் அமைந்துள்ள பென்டைக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணி புரிந்து வருவதையடுத்து குறித்த ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக நேற்றிலிருந்து 3 நாட்களுக்கு மூடி கிருமிநாசினி விசிறி சுத்தப்ப டுத்துமாறு அறிவுரை வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அழகையாலதாகரன் தெரிவித்தார்.

குறித்த ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 3 ஆயிரம் பேர் தொழில் புரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தற் போது மினுவாங்கொடயில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் கொத்தணியையடுத்து இந்த ஆடைத் தொழிற்சாலையில் தற்போது ஊழியர்கள் குறைக்கப்பட்டு இங்குள்ள பணியாளர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொண்டு ஆடைத் தொழிற்சாலை இயங்கி வருகின்றது.

இருந்த போதும் தற்போது களு வாஞ்சிக்குடி மாவடி முன்மாரியில் கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் இருவரது சகோதரிகள், உறவினர்கள் குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இதன் காரணமாக அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் குறித்த ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக இன்றில் இருந்து மூடி சுகாதார நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொதுச் சுகாதார அதிகாரிகள் ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கியதையடுத்து உடனடியாக ஆடைத் தொழிற்சாலை மூடப் பட்டுள்ளது.

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் அறிக்கைகள் வந்த பின்னர் இது தொடர்பாக தீர்மானம் எடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

முஸ்லிம்கள் நேற்று வெள்ளிக்கிழமை இஸ்லாத்தின் இறுதி இறை தூதரான நபிகள் பெருமானாரின் பிறந்த தினமான மீலாதுன் நபி விழாவைக் கொண்டாடினர்.

இதனை முன்னிட்டு ஜனாதிபதி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "இதனைத் தெரிவித்தார்.



மனித குலத்திற்காக செய்த அர்ப்பணிப்புகளை முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்வது சிறந்ததோர் அபிவிருத்தியடைந்த சமூகத்திற்கான அத்திபாரமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். (ஜ-4)

# விசேட அறிவித்தல்

(பதுளை)

பதுளை ரயில்வே நிலையத்திற்கு முன்பாக வார இறுதி சந்தை, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாநகர சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றின் அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக, பதுளை மாநகர சபைத் தலைவர் பிரியந்த அமரசிறி தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஒரு தாய் உயிருடன் இருக்கும்வரை எமது போராட்டம் தொடரும்




## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

**(முறிகண்டி)**

**ஒரு தாய் உயிருடன் இருக்கும் வரைக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது போராட்டம் தொடரும் என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்கத்தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைத் தேடும் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் அவர்களது அலுவலகம் முன்பாக இடம்பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுக்கான நீதி எப்போது கிடைக்கும், அதனை யார் பெற்றுத்தருவார்கள் என்ற ஏக்கத்தில் நாங்கள் வீதிகளில் காத்திருக்கின்றோம். எமது இந்தப்போராட்டம் தீர்வு கிடைக்கும்வரை தொடரும் என உலக நாடுகள் மாத்திரமல்ல சர்வதேசத்தில் வாழும் உறவுகளிற்கும் தெரியும்.

சர்வதேச நாடுகளில் வாழ்கின்றவர்கள் எங்களுக்காக குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடும் எங்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையோடும் நாங்கள் இந்த போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த புதன்கிழமை அமெரிக்க இராஜதந்திர செயலாளர் மைக் பொம்பியோவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டிருந்த போதும் இந்த கொடிய நோயின் காரணமாக அவரைச் சந்திக்க முடியாமல் போயுள்ளது.

இந்த நிலையில் எமது நீதிக்கான கோரிக்கையை அவரிடம் கையளித்துள்ளோம். எமக்கான நீதியைப் பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. கிளிநொச்சியில் மாத்திரமல்ல பல பகுதிகளிலும் மாதாந்தம் 30 ஆம் திகதி இந்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்தக் கொடிய நோயின் காரணமாக எமது உறவுகள் போராட்டத்திற்கு வருகைதர முடியாது இருக்கின்றார்கள். இந்த நிலையில் வருகை தந்த சொற்ப உறவுகளை வைத்துக் கொண்டு எமது போராட்டத்தை முன்னெடுத்து செல்கின்றோம்.

ஒரு தாய் இருக்கும்வரை இந்தப் போராட்டம் தொடரும். கொரோனா மாத்திரமல்ல இராணுவம், இராணுவ புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களிற்கு மத்தியிலும் கூட எங்களது உறவுகளைத் தேடுவதைக் கைவிடப்போவதில்லை.

இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர் நிறையவே அச்சுறுத்தல்கள், விசாரணைகள், விசாரிப்பது போன்றதான போர்வைக்கு மத்தியில் இந்தப் போராட்டத்தை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றோம் எனத் தெரிவித்தார். (ஜ-4-5-100)

# தமிழர்களின் தியாகங்களில் ஏறி நின்று செயலாற்ற முனைவதை நாம் எதிர்க்கிறோம்

## ஜனநாயக போராளிகள் கட்சி

(வவுனியா)

இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டியது இலங்கை தமிழர்களிடமே தவிர சர்வதேசத்திடமல்ல என ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது. அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசியினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தமிழர்கள் இலங்கையில் ஆயுத ரீதியாக பலம்பெற்றிருந்தபோது இனப்பிரச்சினை தொடர்பாக காத்திரமாக செயலாற்றிய சர்வதேச நாடுகள் 2009 போரின் இறுதியில் இலட்சக்கணக்கான மக்கள் போர்வலயத்தில் அகப்பட்டு நிர்க்கதிக்குள்ளாகி கொல்லப்படும் போது ஏன் அர்த்தமுள்ள வகையில் செயற்பட்டு எமது மக்களையாவது பாதுகாப்பாக மீட்டெடுக்கும் மனிதாபமான சர்வதேச சட்டங்களைப் பயன்படுத்தாமல் போனதற்கான காரணிகளை ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச நாடுகளும் இப்போதாவது வெளிப்படுத்த வேண்டுமென மிக மோசமான போரவலத்தை சந்தித்தவர்கள் என்கின்ற உரித்துடன் கேட்டு நிற்கின்றோம்.

தனது பிராந்திய நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சுயநலமாக செயலாற்றிய பிராந்திய அரசு தமிழர்களது பிணக்கு, இலங்கை மீதான ஆதிக்கம் தன்கையை மீறி சென்றுவிட்டதை உணர்ந்து அதற்கெதிராக சதுரங்க மாட தொடங்கியது. அவர்களது கபடையாட்டம் இற்றைவரை தனது நண்பன் யார்? எதிரி யார்? என்று தெரியாமல் தொடர்கிறது.

சர்வதேச மயப்படுத்தப்பட்ட தமிழர்களது உரிமைப் போராட்டம் கூட ஒடுக்கப்படுகின்ற ஓர் பூர்வீக இனக்குடிகளின் உரிமைப்போராட்டமாக வகைப் படுத்தப்படாமல் ஐக்கிய நாடுகளின் சர்வதேச நியமன சட்ட வரைபுகளின்படி ஆராயப்படாமல் பூகோள அரசியல் பரப்புக்குள் அகப்பட்டு சிந்தப்பட்ட இரத்தங்களுக்கும் அழிக்கப்பட்ட உயிர்களுக்கும் நியாய பூர்வமான எவ்வித அணுகு முறைகளும் இன்றி தூக்கி வீசப்பட்டதே வரலாறு.

கடந்த அறுபத்தி எட்டு வருட கால முயற்சிகள் எந்த பலனையும் தரவில்லை. இனப்பிரச்சினை காலத்திற்குகாலம் புதிய பரிணாமம் பெற்று வளர்ந்திருக்கிறதே தவிர அதனை வலுஇழக்கச்செய்யும் சாத்தியமான முனைப்புகளை தமிழர் தரப்பு காட்டவில்லை என்பதும் நிஜம்.

தமிழர்களது நியாயபூர்வமான விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சக்திகளோடு சேர்ந்து முடிவுக்கு கொண்டு வந்த ஆட்சியாளர்களே தற்போதும் சர்வ வல்லைமையோடும் அரியணை ஏறியிருக்கிறார்கள்.

அந்த சர்வ வல்லமை பெற்ற தரப்பினராலேயே இலங்கையில் சுய உரித்தோடு சமதர்மமாக வாழத்தகுதியான தீர்வினை வழங்க முயற்சிக்க வேண்டும்.

கொன்றொழிக்கப்பட்ட தமிழினத்தின் தியாகங்களில் ஏறி நின்று பிராந்திய சர்வதேச சக்திகள் செயலாற்ற முனைவதை நாம் நிராகரிக்கின்றோம்.

நாங்கள் அகிம்சை ரீதியாகவும் ஆயுதமேந்தியும் போரிட்டது எமது மக்களுக்காகவே தவிர பிராந்திய, சர்வதேச நலன்களுக்காக அல்ல என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.

இந்தத் தருணத்தில் இதனைச் செய்ய தவறுவோமாக இருந்தால் எதிர்காலத்தில் தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கும். எதிர்கொள்ள தமிழர்கள் இருக்க மாட்டார்கள் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(5-4-299)

# தற்போதைய கிளைக் கொத்தணிகள் மக்களின் கவனயீன செயற்பாட்டால் சமூகத்தொற்றாகலாம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சமூகத் தொற்று ஏற்படவில்லை என்ற போதிலும் பல பகுதிகளிலும் கிளைக் கொத்தணிகள் உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் பல உள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் கவனயீனமாகச் செயற்பட்டால் விரைவில் சமூகப்பரவலுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

நாட்டில் சமூகத் தொற்று ஏற்படவில்லை என்று எம்மால் உறுதியாகக் கூற முடியும். அதற்கான உறுதிப்படுத்தல்கள் எம்மிடமுள்ளன.

ஆனால், சில பகுதிகளில் ஒரே இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே, கிளை கொத்தணிகள் பல உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

எனவே நாம் அனைவரும் கவனயீனமாகச் செயற்படுவோமானால் விரைவில் சமூகத் தொற்றை நோக்கிச் செல்ல வேண்டியேற்படும். அபாயமான நிலைமைக்கு முன்னால் நாம் நின்று கொண்டிருக்கின்றோம்.

இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலைமையே தொடர்ந்தும் காணப்படுகின்றதால், அபாய நிலைமை குறைந்து விட்டது என்று கூற முடியாது.

பி.சி.ஆர்.பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கமைய இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும்.

எனினும், பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் இந்த சந்தர்ப்பத்தில் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சுகாதார அமைச்சு மற்றும் பாதுகாப்புத்துறை உள்ளிட்டவை ஒன்றிணைந்து போக்குவரத்தை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. அபாயமான நிலைமை காணப்பட்டாலும் முறையான வழிமுறைகளைக் கடுமையாக பின்பற்றினால் அவற்றிலிருந்து விடுபட முடியும்.

நாளொன்றுக்கு 7000 - 8000 பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுக்கக் கூடியளவிலான தயார்படுத்தல்கள் சுகாதார அமைச்சினால் செய்யப்பட்டுள்ளன. பழுதடைந்துள்ள பி.சி.ஆர்.இயந்திரம் வெகு விரைவில் திருத்தப்பட்டு வழமையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றார். (நி-7)

# திடீர் கடல் பெருக்கம்

# அச்சுறுத்தல் ஏதும் இல்லை

## கலாநிதி சூசை ஆனந்தன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**கடந்த சில நாட்களாக நீர் உட்புகுதல் நிகழ்வு- 'பெரிஜி' நிலையில் அமைந்த பெருக்கு ஆகும். எல்லாக் காலங்களிலும் இது ஏற்படாது. இதனால் ஏதும் அச்சுறுத்தல் ஏற்படாது என கலாநிதி சூசை ஆனந்தன் தெரிவித்தார்.**

கடந்த சில நாட்களாக சில இடங்களில் கடல்நீர் உட்புகுவது தொடர்பான செய்திகளை பத்திரிகைகளில் காணக்கூடியதாக உள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரணமாக கரையோரங்களில் ஒருநாளில் இரு பெருக்குகளும் ஒரு தாழ்வுகளும் ஏற்படுவது வழமை. இதற்கு சூரிய, சந்திர, புவிக்கு இடையில் நிகழும் ஈர்ப்பு விசையே காரணமாகும். சந்திரன் புவிக்கு அண்மையில் இருப்பதால் சூரியனைவிட அதிக ஈர்ப்புசக்தி கொண்டதாக அமையும்.

சாதாரண வற்றுப் பெருக்கு நிகழ்வைவிட பௌர்ணமி, அமாவாசை தினங்களில் ஏற்படும் வற்றுப்பெருக்கு மிக அதிகமாகவே இருக்கும். காரணம் புவி, சந்திரன், சூரியன் ஆகிய மூன்றும் இத்தினங்களில் ஏறத்தாழ ஒரே நேர்கோட்டில் அமைவதனாலாகும்.

ஆகவே பௌர்ணமி, அமாவாசை தினங்கள் காலத்தில் ஏற்படும் வற்றுப்பெருக்கு மிகவை (Spring Tide) (மிகவை) வற்றுப்பெருக்கு என்பர்.

அண்மையில் நீர் பெருக்கு வழமைக்கு மாறாக தாழ்வான பகுதிகளில் ஏற்பட்டமைக்குக் காரணம் சந்திரன் புவியை நீள்வட்டப் பாதையில் சுற்றி வரும் போது சில காலங்களில் புவிக்கு அண்மித்தும் சில காலங்களில் தொலைவிலும் அமையும்.

அண்மித்து அமைவதை 'பெரிஜி' நிலை எனவும் சேய்மையில் அமைவதை 'அபாஜி' நிலை என்றும் அழைப்பர்.

இப்போது சந்திரன் பெரிஜி நிலையில் இருப்பதால் பௌர்ணமி தினம் நெருங்கி வரும் இக்காலப்பகுதியில் வழக்கத்தைவிட உயர்வான பெருக்கு ஏற்படும்.

அத்துடன் காற்றின் வேகம், குறித்த பகுதியில் நில அமுக்க வேறுபாடுகள்- கடல் நீரை தாழ்வான நிலப்பகுதிக்குள் ஊடறுத்துச் செல்வதற்கும் வழிவகுக்கும். (5-4)

# யாழ்-பருத்தித்துறை சேவைகள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை -யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

கரவெட்டி ராஜ கிராமத்தைச் சேர்ந்த பலர் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்களாகப் பணியாற்றும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி ராஜ கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று முன்தினம் கண்டறியப் பட்டது.

பேலியகொட மீன் சந்தைக்கு சென்று வந்த நிலையில் அவர் கிராமத்தில் நடமாடியுள்ளார்.

இந்த நிலையில் ராஜ கிராமத்தில் 60 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்றாளருடன் நேரடித் தொடர்பிலிருந்த யாராவது தனியார் பேருந்து சேவையில் கடமையாற்றினால் பயணிகளுக்கு தொற்று ஏற்படலாம். அதனால் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையோரைக் கண்டறியும் வகையில் பருத்தித்துறை- யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைய இடை நிறுத்தப்பட்டுள்ளன. (5-4-60)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)


# தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள்



(யாழ்ப்பாணம்)

விழுது நிறுவனத்தினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 25 குடும்பங்களுக்கு வழங்குவதற்கான உலர் உணவுப் பொதிகளை விழுது நிறுவன உத்தியோகத்தர் க.ஐங்கரன் கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளரிடம் கையளித்தார். (5-4-30)

# மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக வீதியோரம் நின்ற மரத்தின் பெரியளவிலான கிளை ஒன்று முறிந்து வீழ்ந்ததில் தொலைத்தொடர்பு இணைப்பு கம்பங்கள் முறிந்து வீழ்ந்தன. தெய்வாதீனமாக வீதியால் எவரும் பயணிக்காத நேரத்தில் அந்தக் கிளை முறிந்து வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்றது.

வீதிக்குக் குறுக்கே மரக்கிளை வீழ்ந்ததால் அதனை உடனடியாக அகற்றி போக்குவரத்தை சீர் செய்ய நீதிபதிகள் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய நீதிமன்ற உத்தியோகத்தர்கள் விரைந்து நடவடிக்கை எடுதனர்.

அதனால் மல்லாகம் நீதிமன்ற வீதி ஊடான போக்குவரத்து சில நிமிடங்களிலேயே சீராகியது. (5-4)

# கல்லுண்டாயில் கடல் பெருக்கு அணை அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/135 மற்றும் ஜே/136 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய கல்லுண்டாய் குடியேற்றத் திட்டத்திற்குள் கடல் நீர் உட்புகாமல் தடுப்பு அணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கல்லுண்டாய் குடியேற்றத் திட்டப் பகுதியில் கடல்நீர் உட்புகுந்ததனால் 60இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இது தொடர்பாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் தொகுதி இணைப்பாளர் ஞானசீலன் நேரடியாக சென்று மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

இதன்போது ஏற்கனவே குறித்த பகுதியில் கடல் நீர் தடுப்பு அணை ஒன்று காணப்பட்டதாகவும் அது பின்னர் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் பராமரிப்பு இன்மை போன்ற பல காரணிகளால் தடுப்பணை சேதமடைந்து கடல் பெருக்கின் போது நீர் குடிமனைக்குள் புகுவதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அங்கஜன் இராமநாதனின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு கடல் நீர் உட்புகாத வண்ணம் தடுப்பு அணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-4-30)

# வாளுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வாளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (5-4-316)

# சீன தயாரிப்பு கைத்துப்பாக்கி திருகோணமலையில் மீட்பு



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் பொலிஸாரினால் சிறிய கைத்துப்பாக்கியொன்று ஐந்து சன்னங்களுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேசத்திற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவின் பேரில் இக் கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத்துப்பாக்கியை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கைப்பற்றியதாக கந்தளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். துப்பாக்கி தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# கணிப்பானுக்கு அனுமதி

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இன்று நடைபெறவுள்ள கணக்கியல் பாடத்தின்போது பரீட்சார்த்திகளுக்கு நிரல்படுத்தப்படாத கணிப்பானை (Calculater) பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பி. பூஜித தெரிவித்துள்ளார்.

கணிப்பான்களை பயன்படுத்த அனுமதி வழங்குவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.



எனினும் கைக்கடிகாரங்கள், கைத்தொலைபேசிகள் மற்றும் பிற மின்னணு தொடர்பு சாதனங்களை பரீட்சை மண்டபங்களுக்கு கொண்டு செல்வது தடை செய்யப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஜ-7)

# 82 கிலோ கஞ்சாவும் படகும் கடற்படையினரால் மீட்பு

(கரணவாய்)

இந்தியாவில் இருந்து இலங்கை க்கு கடல் மார்க்கமாக கடத்திவரப்பட்ட 82 கிலோ கேரளக் கஞ்சா மீட்டுள்ளதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை இரவு காரைநகரில் உள்ள கடற்படையினர் வட பகுதி கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றை துரத்தி சென்ற போது படகில் இருந்தவர்கள் வேகமாக படகை செலுத்தி சென்று காரைநகர் கசூரினா கடற்கரையில் படகை மறைத்துவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

அப்படகை கடற்படையினர் சோதனையிட்டபோது 82 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. படகும், மீட்கப்பட்ட கஞ்சாவும் காரை நகர் கடற்படை தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. (5-4-60).


## இன்று நடைபெறாது

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இன்று சனிக்கிழமை (31.10.2020) பிற்பகல் 3.00 மணிக்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த,

**"20 ஆவது திருத்தச் சட்டமும் தமிழர் அரசியலும்"**

என்ற தலைப்பிலான உரையரங்கு, கொரோனா காலத்தில் கூட்டம் சேர்வதைத் தவிர்க்கும் பொருட்டு நடைபெறாது என்பதை அறியத் தருகிறோம்.

**பொதுச் செயலாளர்**

**தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்**

**இல.109, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** (4507)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 49 ¼ செவ் 5 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. மில்வேலை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11322

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 31 ¼ செவ் 4 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11323

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 21செவ் 11இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: டிப்ளோமா. ஆசிரியர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11325

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கிபா: 16 சூரி,செவ் 11 இல் உயரம் 5'10"
தகைமை/தொழில்: B.Sc Civil Engineer. Project Engineer (Gov)
எதிர்பார்ப்பு: வைத்தியா, பொறியியலாளர், போன்ற உத்தியோகத்தர்கள்.
தொ.இ: B/11326

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4 கி.பா:செவ்7 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: G/11332

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பரணி1
கி.பா: 33 செவ் 12 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி. பட்டதாரி பயிலுனர்
எதிர்பார்ப்பு: B.Sc பட்டதாரி மணமகன். பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர், போன்றோர் தீவகம் வேண்டாம்.
தொ.இ: G/11333

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 34 செவ் 10 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர். விவாகரத்தனவர். பிள்ளைகள் இல்லாத விவாகரத்தும் ஏற்கப்படும்.
தொ.இ: G/11334

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா:11 ¼ செவ் 9 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: கலைமாணிப்பட்டம். அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/11337

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்.

**யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்.**

விஸ்வலிங்கம் மணிவண்ணன்,
சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

வழக்காளி.

வழக்கு இல : விஷேடம்/12/2020

எதிராக.

1. A.E.ஆனந்தராசா,
   தலைவர்,
   அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
   இல.120, பிராதான வீதி,
   யாழ்ப்பாணம்.

2. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
   பொதுச் செயலாளர்,
   அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,
   இல.120, பிரதான வீதி,
   யாழ்ப்பாணம்.

3. இ.கி.அமல்ராஜ்,
   தெரிவத்தாட்சி அலுவலர்,
   யாழ்ப்பாணம் மாநகரசபை,
   தேர்தல்கள் அலுவலகம்,
   யாழ்ப்பாணம்.

4. மகிந்த தேசப்பிரிய,
   தலைவர்,
   தேர்தல் ஆணைக்குழு,
   தேர்தல் திணைக்களம்,
   இராஜகிரிய.

எதிராளிகள்.

மேற்படி இலக்க வழக்கின் 1-4 வரையான எதிராளிகளுக்கு எதிராக வழக்காளியினால் 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச் செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலிதற்றது என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை முறைக்கோவையின் 16 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.
இவ்வழக்கானது எதிர்வரும் 11.11.2020 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திறந்த மன்றில் அழைக்கப்பட இருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி.

2020 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 29 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(4503)

# அதிரடிப்படையினரால் மரக்கடத்தல் முறியடிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யங்கராவூர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லப்பட்ட முதிரை மரக் குற்றிகளை பூவரசங்குளம் விஷேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பகுதியில் முதிரை மரங்கள் கடத்தப்படவுள்ளதாக பூவரசங்குளம் விஷேட அதிரடி படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று அதிகாலை 3 மணியளவில் அப் பகுதிக்கு சென்ற விஷேட அதிரடிப் படையினர் முதிரை மரக் குற்றிகள் கடத்தலை முறியடித்தனர்.



குறித்த சம்பவத்தில் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான 7 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவற்றைகடத்தி செல்ல பயன்படுத்தப்பட்ட கப்ரக வாகனமும் மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றபட்ட முதிரை குற்றிகளும் வாகனமும் வவுனியா பூவரசங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(5-4-299)

# குடிநீருக்காக அல்லாடும் கிளி.விநாயகபுரம் மக்கள்

(முறிகண்டி)

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக குடிநீர் உள்ளிட்ட தேவைகளிற்காக சில பகுதிகளில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, பச்சிலைப் பள்ளி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறித்த பிரச்சினை நிலவுகின்றது. மழை வீழ்ச்சி இதுவரை கிடைக்காமையினால் மக்கள் நீர்த் தேவையை பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நிலத்தடி நீர் வற்றியுள்ளது. அப்பகுதியில் வாழும் 450 குடும்பங்களில் சுமார் 200 குடும்பங்கள் குடிநீர் உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் குடிநீர் தேவைக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும், குளிப்பதற்கு அருகில் உள்ள குளத்திற்கு செல்வதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் அமைந்துள்ள குளத்தின் நீரும் வற்றியுள்ளது.

வருடம் தோறும் குறித்த பிரச்சினை இக்காலப் பகுதியில் ஏற்படுவதனால் குறித்த காலப் பகுதியில் தமக்கான குடிநீர் உள்ளிட்ட தேவைகளிற்காக நீர் விநியோக திட்டம் ஒன்றை ஆரம்பித்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேவேளை குடிநீருக்காக அப்பகுதியில் பொதுக் கிணறுகளை அமைத்தும், இருக்கின்ற பொதுக்கிணறுகளை ஆழமாக்குவதன் மூலமும் கணிசமான அளவு நீர் தேவையை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது காணப்படும் வரட்சியான நிலை காரணமாக தமது பிரதேசத்தில் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது உள்ளதாகவும், கால்நடைகள் உள்ளிட்டவையும் பாதிப்படைந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பிரதேச சபையினரும் தமது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையை புரிந்து கொண்டு விரைவான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும், தமது பிரச்சினைக்கான நிரந்தர தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (5-100)

# மழை வேண்டி இளநீர் அபிஷேகம்

(தருமபுரம்)

கிளிநொச்சி கல்மடு பகுதியிலுள்ள பல ஏக்கர் வயல் நிலங்களில் மேற்கொள்ளப் பட்ட நெற்பயிர்ச் செய்கை மழையின்றி பாதிப்படையும் நிலையில் காணப்படுகிறது.

எனவே மழை வேண்டி கல்மடுக்குளம் விநாயகர் ஆலயத்தில் 108 இளநீர் அபிஷேக பூசை நேற்று நடைபெற்றது. (5-316-350)

# சட்டவிரோத மணல் அகழ்வு டிப்பர்களுடன் சாரதிகள் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சட்ட விரோத மாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 டிப்பர்களுடன் அதன் சாரதிகளை பளை பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்று முன்தினம் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணவர்தன தெரிவித்துள்ளார்.(5-4-316)

# கடல்நீர் உட்புகுந்ததால் நெல் வயல்கள் பாதிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சூரமுனங்கு பகுதியில் நேற்று முன்தினம் கடல்நீர் உட்புகுந்ததன் காரணமாக பல ஏக்கர் வயல் நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வயலில் நெல் விதைத்து மழையை எதிர்பார்த்து காத்திருக்கும் நேரத்தில் கடல் நீரானது வயல்களுக்கு உட்புகுந்தமையால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் உவர் தடுப்பணையொன்று காணப்படுகிறது எனினும் அந்த அணை கட்டுகள் புனரமைப்பு இன்றி கதவுகளும் இன்றி நிலையிலும் காணப்படுகின்றது.

தடுப்பணை சீராக இருக்குமாக இருந்தால் இக் கடல் நீர் பெருக்கை தடுத்திருக்கலாம் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை வீழ்ச்சி இம்முறை இதுவரை கிடைக்காததன் காரணமாக விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்ற நேரத்தில் கடல் நீரானது வழமைக்கு மாறாக பெருக்கெடுத்து கரையோர விவசாய நிலங்கள் பாதிப்படையச் செய்துள்ளது. (5-4-316)

# தென்னை மரங்களை சேதமாக்கியது யானை



(தருமபுரம்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொல்லக்குறிச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கவாக் குளம் கிராமத்திற்குள் கடந்த புதன்கிழமை இரவு புகுந்த காட்டு யானையால்சுமார்40 தென்னை மரங்கள் சேதமாகியுள்ளன.

தமது பிரதேசத்தில் நீர் தட்டுப்பாடான நிலையிலும் பவுசர் மூலம் நீர் கொண்டு வந்து குறித்த தென்னைகளை வளர்த்து பயன் தர ஆரம்பித்துள்ள நிலையில் யானை நாசப் படுத்தியுள்ளதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-316)

# யாசகர் தொடர்பில் சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள்

(குருமன்காடு)

கொவிட்-19 இன் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் வெளி மாவட்டங்களில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்து யாசகத்தில் ஈடுபடுவோர் தொடர்பில் வர்த்தகர்கள், பொது மக்களுக்கு சுகாதாரப் பிரிவினர் முக்கிய அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளனர்.

குறிப்பாக வாரத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்களும் யாசகர்கள் வர்த்தக நிலையங்களுக்கும் வீடுகளுக்கும் சென்று யாசகத்தில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக அவர்களூடாக கொவிட்-19 தொற்று ஏற்படும் அபாய நிலை காணப்படுகிறது.

எனவே யாசகர்கள் வர்த்தக நிலையம் மற்றும் வீட்டு வளாகத்தினுள் வருவதைத் தவிர்த்து கொள்வதுடன் தேவையேற்படின் முழுமையான பாதுகாப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அவர்களுடன் கலந்துரையாடி, பணம் வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட சுகாதார பிரிவினர் மேலும் கோரியுள்ளனர்.

வெளி மாவட்டத்தில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்து யாசகம் செய்பவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்குரிய நடைமுறையினை வவுனியாப் பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவு பொலிஸார் மற்றும் வவுனியா பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-250)

# இராசிபலன்

31.10.2020
ஐப்பசி 15, சனிக்கிழமை
பூரணை முன்னிரவு 8.55 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 7.10 மணிவரை
சுபநேரம் 3.03 - 4.32 மணிவரை
இராகுகாலம் 9.03 - 10.33 மணிவரை
சந்திராஷ்டமம்:- உத்தரம், அத்தம்
பூரணை விரதம்

வளவன்


மேஷம்

உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மிதுனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


சிம்மம்

பேச்சில் இனிமை பிறக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.


கன்னி

பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.


துலாம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


விருச்சிகம்

திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி கைகூடும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பொதுவாழ்வில் புகழ்கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு

நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


மகரம்

பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.


கும்பம்

முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், நீண்ட நாளை பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


மீனம்

எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

உன் கடமையில் தவறும் போது மட்டும் வருத்தப்படு.

## சுயதனிமைப்படுத்தல்

(கொழும்பு)

கொழும்பில் இரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் பாலசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது,

“கொழும்பைச் சேர்ந்த இரு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களிற்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது.

குறித்த இருவரும் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்திய பின்னர் அவர்களிடம் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், ஜிந்துப்பிட்டியவிலுள்ள பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் குழுவை சுயதனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது” என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## குணமடைந்தோர் 4282

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 140 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 282 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் 9 ஆயிரத்து 791 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 5 ஆயிரத்து 490 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 444 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 19 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## குருநாகல் நகரசபை தனிமைப்படுத்தப்பட்டது


(குருநாகல்)

குருநாகல் நகரசபை, தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் நகரசபை ஊழியர்கள் 8 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தே, குருநாகல் நகரசபை தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

## கொரோனா நோயாளிகள் அடையாளம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் இருவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிமுன்மாரி பகுதியில் ஒருவரும் ஓட்டமாவடியில் ஒருவரும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடியில் இனங் காணப்பட்டவர் பேலியகொட மீன்சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர் எனவும் மாவடி முன்மாரியைச் சேர்ந்தவர் கொழும்பில் இருந்து வந்தவர் எனவும் தெரிவித்தார். இதேநேரம் குறித்த நபர் கடந்த 27 ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்துள்ளதாகவும் தனியார் பேருந்து ஒன்றில் மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அவர் சுகவீனம் காரண மாக மகிழடித்தீவு வைத்திய சாலைக்கு சிகிச்சைக்கு சென்ற நிலையில் அங்கு அவர் மீது சந்தேகம் கொண்டு பி.சி.ஆர்.சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபருடன் பயணித்தவர்கள், பழகியவர்கள், குறித்த நபர் சென்ற இடங்களில் பழகியவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஜ-4)

(கொழும்பு)

சிகை அலங்கார நிலையம் ஒன்றின் உரிமையாளருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கஹத்துடுவ பிரதேசத்தின் பிரதேச சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த சிகை அலங்கார நிலையம் மூடப்பட்டுள்ளதுடன் சிகை அலங்காரம் செய்துகொண்ட 125 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பேலியகொட மீன் சந்தையில் மீன் கொள்வனவு செய்த கஹத்துடுவ மீன் வியாபாரி ஒருவர் இந்த சிகை அலங்கார நிலையத்திற்கு வந்து சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அவர் மூலம் சிகை அலங்கார நிலையத்தின் உரிமையாளருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருக்கலாம் என சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

28 வயதான இந்த சிகை அலங்கார நிபுணர் ஹொரணை பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதுடன் அவரது வீடு மற்றும் 4 இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ஜ-4)

(காலி)

காலி, கொக்கல பகுதியில் உள்ள பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் யுவதியொருவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் வேனுரா கே.சிங்கராச்சி தெரிவித்தார்.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த இரண்டு யுவதிகள் காய்ச்சல், இருமல், சளி போன்ற அறிகுறிகளுடன் காணப்பட்டதையடுத்து, சிகிச்சைக்காக தொழிற்சாலையின் மருத்துவ பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பி.சி.ஆர்.சோதனையில் யுவதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ள நிலையில், நேற்று முன்தினம் இரவு கொரோனா சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட நிலையில், மற்ற யுவதிக்கு இரண்டாவது பி.சி.ஆர்.சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

காலி, ரத்கம பகுதியில் வசிக்கும் இரண்டு யுவதிகளும் பிராண்டிக்ஸ் நிறுவனத்தின் பேருந்திலேயே பயணம் செய்வதாகவும் அவர்களுடன் சுமார் 75-100 ஊழியர்கள் பேருந்தில் பயணித்திருப்பது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து யுவதிகளின் நெருங்கிய கூட்டாளிகள் உட்பட 62 பேர் நேற்று முன்தினம் இரவு பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும் தொழிற்சாலையில் பி.சி.ஆர்.சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட 62 ஊழியர்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் சிறப்பு பொலிஸ் பாதுகாப்பின் கீழ் தங்கள் வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் விசாரணை அறிக்கைகள் வரும் வரை தனிமைப்படுத்தப்பட்டதாகவும் வைத்தியர் வேனுரா கே. சிங்கராச்சி தெரிவித்தார். இதேவேளை கொக்கலவில் உள்ள இந்த பிராண்டிக்ஸ் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 1500 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

06

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அமெரிக்காவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் தேர்தல் விவாதங்களில், டொனால்ட் ட்ரம்ப், ஜோபைடன் இருவருமே சீனாவிற்கு எதிராக தாங்கள் தான் மிகவும் கடுமையாக நடக்கக் கூடியவர் என்று காட்டிக்கொள்ள முயற்சித்து வருகின்றனர். உயிர்ப்பான இந்தியாவுடனான அமெரிக்காவின் ஒத்துழைப்பை மேலும் முன்னெடுத்துச் சென்று இந்திய பசுபிக் பிராந்தியத்தில் அமைதியையும் ஸ்திரத் தன்மையையும் நிலைநாட்ட முயற்சிப்போம் என்பதை இரு வேட்பாளர்களுமே அழுத்திக் கூறி வருகின்றனர்.

ட்ரம்பின் பிரசாரக் குழுவினர் மாநாட்டில் கூறப்பட்ட தேர்தல் அறிக்கையின் படி ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியானால் 10 மாதங்களில் அமெரிக்காவில் ஒரு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப் படும். அமெரிக்க நிறுவனங்களில் உள்நாட்டவர்களுக்கு பதிலாக குறைந்த ஊதியத்தில் வெளிநாட்டு பணியாளர்கள் பணியமர்த்தப்படுவது தடை செய்யப்படும்.

ஆண்டு இறுதிக்குள் கொரோனாத் தடுப்பூசி உருவாக்கப்படும். சீன நிறுவனங்களுக்கு அயலக சேவை வழங்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அரசு ஒப்பந்தங்கள் வழங்கப்படாது உட்பட பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### 2020 - அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பிரதான இரு கட்சிகளின் வேட்பாளர்கள்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் கட்சிகள் நடத்தும் தேசிய மாநாடு மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறியிருந்தோம். இந்த மாநாட்டில் தான் வேட்பாளர்களை ஒவ்வொரு கட்சியும் அதிகாரபூர்வமாக அறிவிக்கும். இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்பும், துணை ஜனாதிபதி மைக் பென்சும் மீண்டும் போட்டியிடுகிறார்கள்.


ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி பதவிக்கு முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைடனும், துணை ஜனாதிபதி பதவிக்கு செனட் சபை எம்.பி. கமலா ஹாரிசும் போட்டியிடுகிறார்கள். இது பற்றியும் முன்னர் கூறியிருந்தேன். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக அமெரிக்க ஆபிரிக்கப் பெண் ஒருவர் போட்டியிடுகிறார்.

கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றால் அமெரிக்க வரலாற்றிலேயே துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமெரிக்க,ஆபிரிக்க பெண் என்ற பெருமையைப் பெறுவார். இவரின் தாய் இந்தியர், பூர்வீகத்தில் தமிழகப் பெண் ஆவார். தமிழ் பாரம்பரியத்தையும் இந்தியக் கலாசாரத்தையும் மறக்கக்கூடாது என்பதற்காவே அவரது தாயார் தனது மகளுக்கு கமலா எனப் பெயரிட்டார்.

## அமெரிக்க அதிபர் தேர்தல் 2020
## குடியரசுக்கட்சி வேட்பாளர்கள்




Donald Trump
**டொனால்ட் ட்ரம்ப்**
**ஜனாதிபதி**
**வேட்பாளர்**



Mike Pence
**மைக் பென்ஸ்**
**துணை ஜனாதிபதி**
**வேட்பாளர்**

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 2020
## ஜனநாயக்கட்சி வேட்பாளர்கள்



Joe Biden
**ஜோ பைடன்**
**ஜனாதிபதி**
**வேட்பாளர்**



Kamala Harris
**கமலா ஹாரிஸ்**
**துணை ஜனாதிபதி**
**வேட்பாளர்**

### நடக்கப்போகும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பற்றி மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் எச்சரிக்கை

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களைச் சீர்குலைக்கும் ரஷ்யா, சீனா மற்றும் ஈரானுடன் தொடர்புடைய கணனி ஊடுருவல் குழுக்கள் (hackers) கள மிறங்கியுள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் எச்சரித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலை போன்றே எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய நபர்கள் ம்ற்றும் குழுக்களை அவர்களுடைய இணைய வலையமைப்புக்குள் இரகசியமாக ஊடுருவி இத்தகைய கும்பல் கண்காணித்து வருவதாகவும் மைக்ரோசொப்ட் தெரிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது, ஜனநாயகக் கட்சியின் பிரசாரத்தை குறிவைத்து சீர்குலைத்த அதே ரஷ்ய ஹக்கர்கள் மீண்டும் களத்தில் இறங்கியுள்ளதாகவும் மைக்ரோசொப்ட் குறிப்பிட்டுள்ளது.

தேர்தலை இலக்காகக் கொண்டு வெளிநாட்டு குழுக்கள் தங்கள் முயற்சிகளை முடக்கி விட்டுள்ளன என்பது தெளிவாகிறது எனவும் மைக்ரோசொப்ட் எச்சரித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ஜோ பைடன் ஆகிய இருவரின் பிரசாரங்களும் ஹக்கர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ளன. ஸ்ட்ரோண்டியம் **(Strontium)** என்ற குழுவை சேர்ந்த ரஷ்ய ஹக்கர்கள் இதுவரை 200 இற்கும் மேற்பட்ட அமைப்புகளை குறி வைத்துள்ளதாகவும் அவற்றில் பல அமெரிக்க அரசியல் கட்சிகளான குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சியினருடன் தொடர்புடையவை என்றும் மைக்ரோசொப்ட் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இதே ஹக்கர்கள்தான் பிரிட்டனை சேர்ந்த அரசியல் கட்சிகள் மீதும் தாக்குதல் நடத்தியதாக அந்த நிறுவனம் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. ரஷ்ய இராணுவ புலனாய்வுத் துறையான ஜி.ஆர்.யு உடன் இணைந்ததாகக் கூறப்படும் சைபர் தாக்குதல் பிரிவான ஃபேன்ஸி பியர்தான் **(Fancy Bear - a cyber-attack unit)** ஸ்ட்ரோண்டியம் என்றும் அழைக்கப்படுகிறது.

கடந்த 2016 ஆம் ஆண்டு தேர்தலின் போது செய்ததைப் போன்றே தற்போது மீண்டும் மக்களின் இணைய கணக்குகளின் உள்நுழைவு விபரங்களை திருடுவதற்கோ அல்லது கணக்குகளை ஊடுருவி முடக்குவதற்கோ ஸ்ட்ரோண்டியம் குழுவைச் சேர்ந்த ஹக்கர்கள் முயற்சிக்க தொடங்கியுள்ளனர். இது உளவு தகவல்களைத் திரட்டவோ அல்லது தேர்தலை சீர்குலைக்கவோ உதவும் என்ற எண்ணத்துடன் மேற்கொள்ளப்படுவதாக தெரிகிறது எனவும் மைக்ரோசொப்ட் கூறியுள்ளது.

### இம்முறை அதிகமான தபால் வாக்குகள் பதிவாகும்

கொரோனா அச்சத்தின் விளைவாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், அளவுக்கதிகமான தபால் வாக்குகள் பதிவாகும் என்று கருதப்படுகிறது. சுமார் 8 கோடி தபால் வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(தொடரும்...)

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களைச் சீர்குலைக்கும் வகையில் ரஷ்யா, சீனா மற்றும் ஈரானுடன் தொடர்புடைய கணனி ஊடுருவல் குழுக்கள் (hackers) களமிறங்கியுள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் எச்சரித்துள்ளது.**

# விமானப் படைக்கு புதிய தளபதி நியமனம்



(கொழும்பு)

இலங்கையின் 18 ஆவது விமானப் படைத் தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் சுதர்ஷன பத்திரன ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய விமானப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சுதர்ஷன பத்திரன எதிர்வரும் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார்.

2019 மே மாதம் 29 ஆம் திகதி இலங்கையின் 17 ஆவது விமானப் படை தளபதியாக நியமிக்கப்பட்ட சுமங்கள டயஸ் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார்.

இந் நிலையிலேயே அந்தப் பதவிக்கு சுதர்ஷன பத்திரன நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

# எதிர்வரும் நாட்கள் அவதானமானவை



## மருத்துவர் ஜயருவன் பண்டார சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துச் செல்வதன் காரணமாக எதிர்வரும் நாட்கள் மிகுந்த அவதானம் மிக்கதாக மாறியுள்ளதாக சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்தார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிலையில் தற்போது செயலிழந்து காணப்படும் பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரத்தை மீண்டும் செயற்படுத்துவதற்காக சீன விசேட வல்லுநர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், தனிமைப்படுத்தல் என்பது சிறை வாழ்க்கை அல்ல எனவும், 'அது இந்த சமூகத்தின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் ஒரு விசேட செயன்முறையெனவும் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்தார். (ஜ-4)

# மேல் மாகாணத்தில் ஊரடங்கு அமுல் வெளியேறினால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேல் மாகாணத்தில் வசிப்பவர்கள் பலர் வேறு மாகாணங்களுக்கு பயணித்துள்ளதாக வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.


கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மேல் மாகாணத்தில் இருந்து பயணிக்கும் அனைத்து வாகனங்கள் விசேட சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சட்ட ரீதியான முறையில் எவரேனும் மேல் மாகாணத்தில் இருந்து வெளி மாகாணங்களுக்கு வெளியேறியிருந்தால் அவர்கள் குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# ஓய்வுபெறவுள்ள தளபதி பிரதமருடன் சந்திப்பு



(கொழும்பு)

சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ள விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ்நேற்று முன்தினம் அலரி மாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

நாட்டின்பாதுகாப்பு நிலைமை மற்றும் விமானப்படையின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸினால் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், தனது சேவை காலத்தில் வழங்கப்பட்ட ஆதரவு தொடர்பிலும் நன்றி பாராட்டினார்.

17 ஆவது விமானப்படைத் தளபதியாக எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் நாட்டிற்காக ஆற்றிய சேவை தொடர்பில் வாழ்த்துத் தெரிவித்த பிரதமர், கொரோனா நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் பிற நடவடிக்கைகளின் மூலம் விமானப்படை இது வரை செய்த சேவைகளை பாராட்டினார்.

எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் நாளை மறுதினம் 2 ஆம் திகதி விமானப் படைத் தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பயணத்தடை மீள்பரிசீலனை செய்யப்படும்

## இராணுவத்தளபதி நம்பிக்கை

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ இலங்கையில் வைத்து விடுத்த அறிவிப்பு நடைமுறைக்கு வரும் என நம்புவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கடந்த 28 ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றார்.

இதன்போது இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள பயணத் தடை தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படும் என்ற அறிவிப்பை அவர் விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'அமெரிக்கா என்பது பலம்பொருந்திய நாடு, இராஜாங்கச் செயலாளர் பதவியை வகிப்பவரும் பலம் பொருந்திய நபராகவே கருதப்படுவார்.

எனவே, அப்படியான ஒருவர் வழங்கிய அறிவிப்பு தொடர்பில் சாதகமான பெறுபேறு கிடைக்கும் என நேர்கோணத்தில் சிந்திப்போம். அது எவ்வாறு நடைமுறைக்கு வரும் என்பது தொடர்பிலும் நல்லதாகவே யோசிப்போம்' எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# 10 ஊழியர்கள் தனிமை

(கொழும்பு)

சிகிரிய மத்திய கலாசார நிதியத்தின் 10 ஊழியர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிகிரிய மத்திய கலாசார நிதியத்தில் பணியாற்றி வந்த ஊழியர் ஒருவரின் மனைவி, கொரோனாத்தொற்றுக்குள்ளாகியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊழியரின் மனைவி லாகல கொரோனா சிகிச்சை நிலையத்தில் தாதியர் ஆவார்.

இந்நிலையில் மேற்கூறப்பட்ட ஊழியருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய மொத்தம்10 ஊழியர்களை அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பொலிஸ் அதிகாரி பலி

(கொழும்பு)

கடமைகள் நிமித்தமாக வெளியில் சென்றுவிட்டு மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு திரும்பிக்கொண்டிருந்த போது திடீர் சுகயீனமுற்று பியகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உயிரிழந்தார். நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. (ஜ-4)

# மதுபானப் போத்தல்கள் மீட்பு

(பதுளை)

பதுளை பிராந்திய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்பின் கீழ் பதுளை மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவு தலைமையிலான குழுவினர் நேற்று ஹாலிஎல கலவுட பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 180 மில்லி லீற்றர் கொள்ளளவுடைய 50 மதுபானப் போத்தல்களை கைப்பற்றினர்.

ஹாலிஎல கலவுட பிரதேசத்தில் கிராமிய உற்பத்திப் பொருட்களை கித்துள்பாணி, கித்துள் கருப்பட்டி, மிளகு போன்ற பொருட்கள் விற்பனை செய்து வந்த வியாபாரியிடமிருந்தே இந்த மதுபானப்போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-4)

# பாரதம்

## பா.ஜ.க. உறுப்பினர்கள் மூவர் சுட்டுக் கொலை

(காஷ்மீர்)

காஷ்மீரில் இந்தியாவின் ஆளும் இந்து தேசியவாத கட்சியின் மூன்று உறுப்பினர்களைச் சந்தேகத்திற்குரிய பிரிவினைவாத கிளர்ச்சியாளர்கள் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

அதன்படி தெற்கு காஷ்மீர் பள்ளத்தாக்கின் குல்கம் மாவட்டத்தில் மூன்று பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் (பா.ஜ.க.) உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொண்டிருந்த கார் மீது நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரிவினைவாத கிளர்ச்சியாளர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## அமெரிக்காவைத் தாக்கிய ஜீட்டா ஆறு பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியை புரட்டிப் போட்ட ஜீட்டா சூறாவளி காரணமாக குறைந்தது ஆறு பேர் உயிரிழந்துள்ளதுடன் 2 மில்லியனுக்கும் அதிகமானோர் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் தென்கிழக்கின் பெரும்பகுதிக்கு ஜீட்டா சக்திவாய்ந்த காற்றைக் கொண்டு வந்தது. அங்கு 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தற்போது மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சூறாவளி லூசியானாவின் கடற்கரையில் 110 மைல் வேகத்தில் வீசியது. புதன்கிழமை பிற்பகல் டெரெபோன் பாரிஷில் உள்ள கோகோட்ரி அருகே வந்தது.

அதன் கண் பின்னர் நியூ ஆர்லியன்ஸ் மற்றும் அண்டைய பகுதிகளான மிசிசிப்பி மற்றும் அருகிலுள்ள மாநிலங்களை நோக்கிச் சென்றது. இந்த ஆண்டு லூசியானாவைத் தாக்கிய ஐந்தாவது புயலாக ஜீட்டா பெயரிடப்பட்டுள்ளது. (நி)

## அடுத்த 15 ஆண்டுகளுக்கு சீனாவில் இவரே ஜனாதிபதி



(பீஜிங்)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டு மாநாட்டில் ஜனாதிபதி ஜின்பிங்கின் அடுத்த 15 ஆண்டுகளுக்கு சீனாவின் ஜனாதிபதியாக தொடர்ந்து பதவி வகிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. (நி)

## அகதிகள் 140 பே



(ஜெனிவா)

ஐரோப்பா நோக்கி சுமார் 200 புலம்பெயர்ந்தவர்களுடன் புறப்பட்ட கப்பல் ஒன்று பயணத்தை ஆரம்பித்து சிறிது நேரத்தில் தீப்பற்றி செனகல் கடற்பிராந்தியத்தில் மூழ்கியதில் 140 பேர் உயிரிழந்துள்ளதாக புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (IOM) தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் பதிவான மிக மோசமான கப்பல் விபத்து இதுவென

## 25 பேரை கொன்று குவித்த இருவருக்கு மரண தண்டனை

(பமாக்கோ)

மாலியில் 25 பேரை கொன்று குவித்த வழக்கில் 2 பயங்கரவாதிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆபிரிக்க நாடான மாலியில் 2012 ஆம் ஆண்டில் இருந்து மத அடிப்படையிலான பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு, மார்ச் 8 ஆம் திகதி, அதிகாலை ஒரு மணிக்கு தலைநகர் பமாக்கோவில் உள்ள இரவு விடுதி ஒன்றில் முக மூடி அணிந்த பயங்கரவாதி ஒருவன் நுழைந்து அங்கிருந்தவர்களை தானியங்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதுடன், கையெறி குண்டுகளையும் வீசினான்.

இந்தத் தாக்குதலில் 2 ஐரோப்பியர்கள் மற்றும் மாலி பொலிஸார் உட்பட 25 பேர் கொல்லப்பட்டனர். சுவிஸ் நாட்டை சேர்ந்த 3 பேர் உட்பட 8 பேர் படுகாயம் அடைந்தனர். 2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்த நகரில் வெளிநாட்டினரை குறிவைத்து நடத்தப்பட்ட முதல் பயங்கரவாத தாக்குதல் இதுதான். அதே ஆண்டில் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி பமாக்கோவில் உள்ள ரேடிசன் புளூ நட்சத்திர ஹோட்டலுக்குள் பயங்கரவாதிகள் நுழைந்து துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினார்கள்.

அது மட்டுமின்றி ஹோட்டலில் தங்கி இருந்த 170 பேரை பிணைக்கைதிகளாக பிடித்தார்கள். அதிரடிப்படை கொமாண்டோக்கள் சென்று அதிரடியாக தாக்குதல் நடத்தி பிணைக்கைதிகளை விடுவித்தார்கள்.

எனினும் பயங்கரவாதிகள் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர். மாலி நாட்டினர் 9 பேர், ரஷ்ய விமான சிப்பந்தி, சீன கட்டுமான நிறுவன அதிகாரிகள், பெல்ஜியம் அரசியல்வாதி, அமெரிக்க தொண்டு நிறுவன ஊழியர் உள்ளிட்டோர் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். இவ்விரு தாக்குதல்களுக்கும் அல் முராபிடவுன் என்ற ஆபிரிக்க பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது. மேலும் அந்த அமைப்பின் பயங்கரவாதிகளான மொரிட்டானியா நாட்டின் பவாஸ் ஒல்ட் அகமீதாவும் அவனது கூட்டாளியான சதோசாகோவும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது பயங்கரவாத குற்றம் சுமத்தப்பட்டது.

வழக்கை விசாரித்த பமாக்கோ நீதிமன்றம் அவர்கள் 2 பேர் மீதான பயங்கரவாத தாக்குதல் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால், குற்றவாளிகள் என அறிவித்து மரண தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பு அளித்தது. மாலி நாட்டில் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



பிளாஸ்ரிக் குடிநீர் மற்றும் குளிர்பான போத்தல்கள் மறுசுழற்சி செய்து அழிக்கப்பட்டாலும், அதிக பயன்பாடு காரணமாகத் தினமும் நூற்றுக்கணக்கிலும் பிளாஸ்ரிக் போத்தல்கள் குப்பைகளில் சேர்கின்றன. இந்தப் போத்தல்களைப் பயனுள்ள பொருட்களாக மாற்றும் நோக்கத்தில் வெற்று பிளாஸ்ரிக் குடிநீர் போத்தல்களைப் பயன்படுத்தி புதிய குளியலறைக் கட்டடத்தைக் கட்டியுள்ளது தூத்துக்குடி மாநகராட்சி.

## முகக்கவசம் அணியாதவர்களுக்கு தண்டனையாக வீதித் துப்புரவுப்பணி



(மும்பை)

முகக்கவசம் அணியாதவர்களுக்கு வீதியைச் சுத்தம் செய்ய வைக்கும் நூதன தண்டனையை மும்பை மாநகராட்சி வழங்கி வருகிறது.

இந்தியாவில் மகாராஷ்டிராவில் தான் கொரோனா பாதிப்பு அதிகளவில் உள்ளது. இருப்பினும் தலைநகர் மும்பையில் அதிகம் பேர் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தடுப்பூசி வரும் வரை முகக்கவசம் தான் கொரோனாத் தடுப்பு மருந்தாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் மும்பையில் முகக்கவசம் அணியாதவர்களை வீதியைச் சுத்தம் செய்ய வைக்கும் நூதன தண்டனை வழங்கப்பட்டு வருகிறது.

இது குறித்து மாநகராட்சி உதவி கமிஷனர் விஸ்வாஸ் மோதே கூறுகையில், "முகக்கவசம் அணியாதவர்களிடம் ரூ.200 அபராதம் வசூலித்து வருகிறோம்.

இதில் அபராதம் செலுத்த மறுப்பவர்கள் மற்றும் ஊழியர்களிடம் தேவையின்றி வாக்குவாதத்தில் ஈடுபடுபவர்களை வீதியைச் சுத்தம் செய்தல் போன்ற சமூகப் பணிகளில் ஈடுபட வைக்கிறோம் எனத் தெரிவித்தார். (நி-4)

## அதிக செலவில் இடம்பெறும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், வரலாற்றிலே மிக அதிக செலவாகும் தேர்தலாக அமைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில், குடியரசுக் கட்சி சார்பில், ஜனாதிபதி ட்ரம்பும் ஜனநாயக கட்சி சார்பில், ஜோ பிடனும் போட்டியிடுகின்றனர்.

இருவரும் காரசாரமான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஏகப்பட்ட வாக்குறுதிகளைக் கொடுத்து வருகின்றனர்.


குறிப்பாக இந்தியர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு ட்ரம்ப் மற்றும் ஜோ பிடன் கடுமையான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்காவில் தேர்தல் ஆய்வு அமைப்பான, சென்டர் பார் ரெஸ்பான்சிவ் பாலிடிக்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவில், அடுத்த மாதம் நடக்க உள்ள ஜனாதிபதித் தேர்தல் தான், மிக அதிகமான பணம் செலவழிக்கப்பட்ட தேர்தலாக, தேர்தல் வரலாற்றில் அமைய உள்ளது. (நி-4)



# வெளிநாடு

## ள் படகு தீப்பற்றல் ...பர் உயிரிழப்பு



வும் ஐ.ஓ.எம். நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் 60 பேரை மீட்டதாக செனகல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடலில் மூழ்கிக் காணாமல் போன 140 பேரும் உயிரிழந்துவிட்டதாக டக்கரில் உள்ள ஐ.ஓ.எம். செய்தித் தொடர்பாளர் ஐசடோ சை (Aissatou Sy) தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விபத்தை அடுத்து ஆட்கடத்தல் வலையமைப்புக்களை கண்டறிந்து தடுக்க சர்வதேச அரசுகள் முன்வர வேண்டும் என ஐ.ஓ.எம். தலைவரான பேக்கரி டூம்பியா (Bakary Doumbia) விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளார்.

கிழக்கு அட்லாண்டிக்கில் ஒரு ஆபத்தான பாதை வழியாக ஐரோப்பாவை அடைய முயற்சிக்கும் புலம்பெயர்ந்தோர் குறித்து செனகல் அரசாங்கம் கடந்த திங்களன்று எச்சரித்திருந்த நிலையில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

200 பேருடன் மூழ்கிய கப்பல் மேற்கு செனகலின் கடலோர நகரமான எம்பூரில் இருந்து கடந்த சனிக்கிழமை புறப்பட்டது. புறப்பட்ட சில மணிநேரங்களில் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டது என குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-4)

## இரண்டாவது தாக்குதல் முயற்சி முறியடிப்பு

### பிரான்ஸில் தொடரும் பதற்றம்

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் தெற்கு நகரமான நைஸில் உள்ள தேவாலயத்தில் நேற்று இடம்பெற்ற கத்திக் குத்து தாக்குதலில் மூவர் உயிரிழந்தும் பலர் காயமடைந்தும் உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது நபிகள் நாயகத்தின் கேலிச்சித்திரத்தை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என அறிவித்திருந்த நிலையில், தற்போது மேலும் ஒரு நபர் துப்பாக்கியுடன் அவிங்கான் மாகாணத்தில் உள்ள மோண்ட்பவேட் என்ற நகரின் ஒரு தெருவில் சுற்றித்திரிந்ததையடுத்து அவர் அந்நாட்டு பாதுகாப்பு படையினரால் சுடப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரேநாளில் பிரான்ஸில் இடம்பெற்றுள்ள இரண்டு பயங்கரவாத தாக்குதல் காரணமாக அந்நாட்டில் தற்போது பதற்றம் நிலவுகின்றது.

இந்நிலையில், சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் உள்ள பிரான்ஸ் தூதரகத்திற்கு வெளியே ஒரு பாதுகாப்புக் காவலர் குத்தப்பட்டு காயமடைந்துள்ளதாகவும் மேலும் இரண்டு ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஒருவர் ஒரு தேவாலயத்திற்கு அருகே கத்தியுடனும் மற்றொருவர் வாளுடன் ரயிலில் ஏற முற்பட்ட போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் பிரபல பத்திரிக்கையான சார்லி ஹேப்டோவில் வெளிவந்த நபிகள் நாயகத்தின் கேலிச்சித்திரத்தை மையமாக வைத்து அந்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

கடந்த 16 ஆம் திகதி சாமுவேல் பெடி என்ற வரலாற்று ஆசிரியர் பயங்கரவாதியால் தலைதுண்டித்து கொல்லப்பட்டமையும் இதன் பின்னணியே.

இந்நிலையில், நேற்றுப் பகல் வேளையில் பிரான்ஸின் தெற்கு நகரமான நைஸில் உள்ள தேவாலயத்திற்குள் கத்தியுடன் நுழைந்த பயங்கரவாதி அங்கிருந்தவர்கள் மீது கொடூரமாக தாக்குதல் நடத்தியிருந்தான்.

இந்த தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவர் தலை துண்டித்து கொல்லப்பட்டுள்ளார். இதனையடுத்து இம்மாதத்தில் இருவர் தலை துண்டித்து கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் பிரான்ஸ் நாட்டின் அனைத்து தேவாலயங்களிலும் ஒரே நேரத்தில் மணி ஓசை எழுப்பப்பட்டுள்ளது. (நி-4)

## 200 நாட்களாக தாய்வானில் தொற்றில்லை



(தைப்பே)

தாய்வானில் இறுதியாக கொரோனாத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டு 200 நாட்கள் கடந்துள்ளதாகவும் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதில் தாய்வான் சிறப்பாக செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாய்வானில் இறுதியாக ஏப்ரல் 12 அன்று கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டதையடுத்து இதுவரை யாருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என அந்நாட்டு நோய் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் இந்த வெற்றியை குறிப்பிட்டு, பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர், அதேநேரத்தில் மக்களை தொடர்ந்து முகக்கவசம் அணியவும், அடிக்கடி கைகளைக் கழுவவும் வலியுறுத்தியுள்ளனர்.

இதுவரை அந்நாட்டில் 553 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். மேலும் தொற்றுநோய் காரணமாக 7 மரணங்கள் பதிவாகியுள்ளன.

எனினும் தாய்வான் உள்நாட்டு பரிமாற்றத்தை நிறுத்தியுள்ள நிலையில், வெளிநாட்டிலிருந்து வரும் மக்களிடையே புதிய கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும், தாய்வானை விட்டு வெளியேறிய பின்னர் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படும் நபர்களின் அறிக்கைகளை அடுத்து தாய்வான் உண்மையிலேயே கொரோனா வைரஸிலிருந்து விடுபட்டதா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பிரான்ஸ் தாக்குதலுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்



(லண்டன்)

பிரான்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் பிரான்ஸ் நாடு நிலைகுலைந்து போய் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஊரடங்கு அமுலுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் பிரான்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில், பிரான்ஸில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களால் நாங்கள் அதிர்ச்சியும் வருத்தமும் அடைகிறோம். இதுபோன்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பயங்கரவாதம் மற்றும் வன்முறை பயங்கரவாதத்திற்கு எதிரான எங்கள் போராட்டத்தில் பிரான்ஸுடனான ஒற்றுமையில் நாங்கள் உறுதியாகவும் நிற்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## பயங்கரவாத சம்பவங்கள் அதிகரிப்பு பிரான்ஸில் அவசரநிலை பிரகடனம்

(பாரிஸ்)

பிரான்ஸில் அண்மைக் காலமாக பதிவாகிவரும் பயங்கரவாத சம்பவங்களை தொடர்ந்து, அங்கு பாதுகாப்பு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பு நலன்கருதி நாடு முழுவதும் பாதுகாப்புப்படையினர் இரு மடங்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக மூவாயிரம் வீரர்கள் குவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை ஏழாயிரம் வீரர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் அதிநவீன ஆயுதம் ஏந்தி பாதுகாப்பு படையினர் அதிரடி ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறனர். மேலும், அந்நாட்டில் பயங்கரவாத செயல்களுக்கு ஆதரவாக குழுக்களை குறிவைத்து தீவிர தேடுதல் நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

இதேவேளை நேற்று வெள்ளிக்கிழமை முதல் நாடு முழுவதும் 1 மாத காலத்துக்கு (நவம்பர் இறுதிவரை) ஊரடங்கு மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இடர் வலயங்களுக்குள் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிருங்கள்

## ஜனாதிபதி வேண்டுகோள்

**(கொழும்பு)**

**இடர் வலயங்களுக்குள் மக்கள் ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட வேண்டும். மேல் மாகாணத்தில் திருமணங்கள் மற்றும் சமய நிகழ்வுகள் உள்ளிட்ட மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி தெரிவித்தார்.**



மருத்துவத் துறையிலும் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாக அறிந்துகொள்ளக் கூடிய புதிய செயலி (APP) மேல் மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அப்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொவிட் நோய்த் தொற்றாளர்கள், தொடர்புடையவர்கள், தனிமைப்படுத்தல், பி.சி.ஆர். பரிசோதனை சேவைகள், கண்காணிப்பு, தீர்மானங்களை மேற்கொள்தல், நோய்த் தொற்றாளர்களுக்கு கிட்டிய பிரதேசங்களுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்தப் புதிய செயலியின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொவிட் ஒழிப்பு செயலணி நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒன்றுகூடிய சந்தர்ப்பத்தில் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தம்மிக ஜயலத் தலைமையிலான குழுவினால் புதிய செயலி அறிமுகப் படுத்தப்பட்டது.

புதிய அபிவிருத்திகள் தொடர்பான தகவல்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.


பொருட்கள் பகிர்ந்தளிக்கும் வலயமைப்பின் ஊடாக வைரஸ் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதை தவிர்ப்பதற்கு அனைத்து தரப்பினரதும் உதவி தேவையானதாகும். சுகாதாரத்துறையின் வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றுவது அனைவரினதும் சமூகப் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தம்புள்ளை உள்ளிட்ட பொருளாதார மத்திய நிலையங்களை அண்மித்த பிரதேசங்களில் எழுமாறான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். கொவிட் கொத்தணி உருவாகக் கூடிய இடங்கள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நேற்று நள்ளிரவு முதல் மேல் மாகாணத்திற்கு பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

எந்தவொரு பொலிஸ் நிலையத்தினாலும் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களின் போது அதற்கு இடமளிக்கப்படும். (நி-4)

# கழிவுகளை மீள அனுப்பத் தீர்மானம்



(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மேலும் ஒரு தொகுதி கழிவுகளை மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு துறைமுகத்திலுள்ள 20 கொள்கலன் கழிகளை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மீள அனுப்பவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், மேலும் 65 கொள்கலன் கழிவுகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மீள அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# குற்றவியல் பிரிவில் 14 அதிகாரிகளுக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

கொழும்பு குற்றவியல் பிரிவைச் சேர்ந்த 14 அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவர் முன்னதாக கொரோனாத் தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டது. அதன் பின்னர் அவருடன் தொடர்புகளைப் பேணிய ஏனைய 20 அதிகாரிகள் மீது பி.சி. ஆர்.சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தப் பி.சி.ஆர். சோதனை முடிவுகளில் 13 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சாத்தானின் குரல்!

ஒரு பெரிய கடல். அதிலே ஒரு பெரிய படகு போய்க் கொண்டிருக்கின்றது. அந்த படகிலே ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் ஒரு சாது. அதே படகிலே இன்னும் சிலபேர் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் எல்லாம் அந்த சாதுவை கேலி செய்வது–கிண்டல் செய்வது– அவர் மௌனமாக உட்கார்ந்திருக்கின்ற பொழுது ஆ.. ஊ.. என்று சத்தம் போடுவது. இப்படியே வந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தொந்தரவைப் பற்றியெல்லாம் அந்தப் பெரியவர் கவலைப்படவில்லை.

அவர் பாட்டுக்குப் பொறுமையாக வந்து கொண்டிருந்தார். இருட்டிப் போய்விட்டது. அந்தப் பெரியவர் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் இருந்தார். இதைப் பார்த்துவிட்டு ஒருத்தன் சொன்னான். டேய் இந்த சாது இப்பொழுது தியானத்திலே இருக்கின்றார். இதுதான் நாம் வம்பு வளர்க்கிறதற்குச் சரியான நேரம் என்றான்.

ஆமாண்டா என்றான் இன்னொருவன். உடனே எல்லோரும் அவரைப் பற்றி கிண்டல் செய்து கன்னா பின்னா என்று பேச ஆரம்பித்தார்கள். அவர் கவனம் திரும்பவில்லை. கீழே கிடந்ததையெல்லாம் எடுத்து அவர் மேல் போட்டுப் பார்த்தார்கள்.

அப்பொழுதும் அவர் அசையவில்லை. ஒருவன் கீழே கிடந்த ஒரு காலணியை எடுத்து அவர் தலையில் அடித்தான். அப்பொழுதும் அந்த சாது தியானத்திலேயே இருந்தார். அவர் முகம் அன்பாகவே இருந்தது. இந்த சமயத்திலே ஆகாயத்திலே இருந்து ஒரு குரல் அதாவது அசரீரி. அந்தக் குரல் சொல்லியது... என்னுடைய அன்புக்குரியவனே... நீ விரும்பினால் இந்தப் படகை நான் கவிழ்த்து விட்டுவிடுகின்றேன் என்றது. இப்பொழுதும் அந்த சாதுவின் தியானம் கலையவில்லை. ஆனால் அவரை கேலி செய்தவர்களும் அடித்தவர்களும் இந்தக் குரலைக் கேட்டுப் பயந்து விட்டார்கள். இந்த சாது சரி என்று சொன்னால் இந்த படகையே கவிழ்த்து விட்டுவிடுகின்றேன் என்றது அந்த அசரீரி.

இவர் சரி என்று சொல்லிவிட்டால் எங்கள் கதி என்னத்திற்கு ஆகிறது என்று யோசித்துப் பார்த்தார்கள்.

விளையாட்டு வினையாக முடிந்துவிடும் போல இருக்கின்றதே என்று நினைத்து பயந்த போய்விட்டார்கள். உடனே எல்லோரும் அந்தப் பெரியவர் காலிலே பொத்தென்று விழுந்தார்கள். ஐயா எங்களை மன்னித்து விடுங்கள்.

ஏதோ தெரியாமல் தப்பு செய்து விட்டோம் என்றார்கள். சாதுவுடைய தியானம் முடிந்துவிட்டது. மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்த போது பயந்த முகத்துடன் சுற்றியிருந்தார்கள் மனிதர்கள். உடம்பு முழுவதும் நடுக்கிக் கொண்டிருந்தது. அவர்களைப் பார்த்து அந்தப் பெரியவர்... கவலைப்படாதீர்கள் என்றார். அவர்களை அமைதிப்படுத்தினார். அதற்குப் பின்பு நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தார். வானத்தை நோக்கி கைகளை உயர்த்தினார்.

என்னுடைய அன்பான கடவுளே... நீ என்னத்திற்காக சாத்தானின் மொழியில் பேசுகின்றாய். நீ கவிழ்த்து விளையாட வேண்டும் என்று நினைத்தால் அதற்காக இந்தப் படகைக் கவிழ்க்க வேண்டாம்.

நீ புரட்டித் திருப்ப வேண்டியது இந்தப் படகை இல்லை. இந்த மனிதர்களுடைய புத்தியை.

புத்தியைத் திருப்பாமல் படகைத் திருப்பிறதனாலே என்ன பிரயோசனம்? என்றார். உடனே ஆகாயத்திலிருந்து பதில் வந்தது.

என் அன்புக்குரியவனே...நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நீ சரியான உண்மையைப் புரிந்து கொண்டாய். சிறிது நேரத்திக்கு முன்னர் ஒலித்தது என்னுடைய குரல் அல்ல. அது சாத்தானின் குரல்... எவன் ஒருத்தன் சாத்தானின் குரலைப் புரிந்து கொள்ள முடியுமோ அவன் மட்டுமே என்னுடைய குரலையும் புரிந்து கொள்ள முடியும்... என்றது அந்தக் குரல்.

இது ஒரு பெரியவர் சொன்ன கதை. சில சமயம் நமக்கு நல்லது செய்வது மாதிரி சிலபேர் புத்தி சொல்லுவார்கள்...யோசனை சொல்லுவார்கள். அது சாத்தானின் குரல். அதன்படி நடந்தால் நாம் வம்பிலே மாட்டிக் கொள்வோம்.. எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒரு நாள் இரவு... கடவுளே எனக்கு ஒரு வரம் கொடு என்று வேண்டிக் கொண்டான் ஒருவன்.

உடனே ஆகாயத்திலிருந்து.. என்ன வேண்டும் என்று கேள்.. என்றது ஒரு குரல்.. ஊருக்குப் போயிருக்கின்ற என் மனைவி நாளைக்கு திரும்பி வருவதாக லெட்டர் போட்டிருக்கின்றார். தயவு செய்து அவ நாளைக்கு இங்கே வராதபடி செய்துவிட வேண்டும் அவ்வளவு தான்.. என்றார்.

அவ்வளவு தானே கவலைப்படாதே.. நாளைக்கு நிச்சயமாக அவள் இங்கே வரமாட்டாள். ஏன் என்றால் இன்றைக்கே வந்துவிட்டாள் என்று குரலை மாற்றி பேசிக்கொண்டே மாடியிலேயிருந்து இறங்கி வந்தாள் அந்த அம்மா.

# வேலைவாய்ப்புக்கள்

நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவு, காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப வேளாண்மை இராஜாங்க அமைச்சு

## கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு - 03 சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2020

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உதவியாளர் III ஆம் வகுப்பின் பதவியின் பொருட்டு தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பள அளவுத் திட்டம்:**

   பொது நிர்வாக சுற்றுநிருபம் 03/2016 இன் கீழ் MT 1 - 2016 சம்பள அளவுத்திட்டத்திற்கமைய,

   ரூபா 29840 - 10x 300- 11 x 350 - 10x 560-10x660 - 48,890/=

2. **தெரிவு செய்யப்படும் முறை:**

   விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சைக்கு ஈடுபடுத்தப்படுவதுடன், ஒரு வினாப்பத்திரத்திற்கு ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள், அப்பரீட்சையில் இரண்டு பாடங்களின் பொருட்டும் பெற்றுக் கொண்டுள்ள மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையின் தொடர் முறைக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

3. **விண்ணப்பித்தல் :**

   விண்ணப்பப்படிவம் www.agrariandept.gov.lk என்னும் இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 கடதாசியின் (21cm x 29cm) இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டு, பரீட்சார்த்தியினால் தனது சொந்த கையெழுத்தினால் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும். விண்ணப்படிவங்கள் 13.11.2020 ஆந் திகதி அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, "கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம், 42, சேர் மார்க்கஸ் பெர்ணாந்து மாவத்தை, த. பெ. இலக்கம் 537, கொழும்பு 07" என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் மட்டும் அமைப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2020" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எண்ணியள்ள மொழி மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தல் வேண்டும்.

   இது தொடர்பான மேலதிகத் தகவல்களின் பொருட்டு www.agrariandept.gov.lk என்னும் இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**டபிள்யூ.எம்.எம்.பீ. வீரசேகர,**
**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.**

**2020 ஒக்டோபர் மாதம் 16 ஆந் திகதி.**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**த.பெ. 537, கொழும்பு 07.**

---

நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவு, காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப வேளாண்மை இராஜாங்க அமைச்சு

## கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2019/2020

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆம் வகுப்பின் பதவியின் பொருட்டு தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. **சம்பள அளவுத் திட்டம் (மாதாந்தம்):**

   பொது நிர்வாக சுற்றுநிருபம் 03/2016 இன் கீழ் MN 3 - 2016 சம்பள அளவுத் திட்டத்திற்கமைய

   ரூபா 31040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 -10x750 - 57,550/=

2. **தெரிவு செய்யப்படும் முறை:**

   விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சைக்கு ஈடுபடுத்தப்படுவதுடன், ஒரு வினாப்பத்திரத்திற்கு ஆகக் குறைந்தது 40% புள்ளிகள் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள், அப்பரீட்சையின் இரண்டு பாடங்களின் பொருட்டும் பெற்றுக் கொண்டுள்ள மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையின் தொடர் முறைக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

3. **விண்ணப்பித்தல் :**

   விண்ணப்பப்படிவம் www.agrariandept.gov.lk என்னும் இணையதளத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 கடதாசியின் (21cm x 29cm) இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டு, விண்ணப்பதாரியினால் விண்ணப்பப்படிவத்தைத் தனது சொந்த கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 13.11.2020 ஆந் திகதி அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, "கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம், 42, சேர் மார்க்கஸ் பெர்ணாந்து மாவத்தை, த.பெ. இலக்கம் 537, கொழும்பு 07" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2019/2020" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எண்ணியுள்ள மொழி மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தல் வேண்டும். இது தொடர்பான மேலதிகத் தகவல்களின் பொருட்டு www.agrariandept.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**டபிள்யூ.எம்.எம்.பீ. வீரசேகர,**
**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.**

**2020 ஒக்டோபர் மாதம் 16 ஆந் திகதி.**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**த.பெ. 537,**
**கொழும்பு-07.**

---

# யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அநுராதபுரம், கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஹலகம பகுதியில் காட்டு யானையின் தாக்குத லினால் வயோதிப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த பெண், கஹட கஸ்திகிலிய-மீமின்னாவல, இஹ லகம பகுதியைச் சேர்ந்த சுதாகே விமலாவதி (வயது-64) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டுக்கு அருகில் சத்தம் கேட்டதை யடுத்து கதவைத் திறந்து வெளியே செல்ல முற்பட்டபோது முன்னால் நின்ற யானை தூக்கி வீசியதாகவும் அதனை அடுத்து அவ்விடத்திலேயே அப்பெண் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பெண்ணின் சடலம் தற்பொழுது சம்பவ இடத்தில் இருப்பதாகவும் விசாரணையின் பின் னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப் படைக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# பள்ளிகள் மூடல்

(கொழும்பு)

புத்தளம் நகர சுகாதார அதிகாரியின் அறுவுறுத்தல்களுக்கு அமைய 2020.10.29 ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு பெரிய பள்ளியில் நடைபெற்ற கலந்துரையாடலில் தற்காலிகமாக பள்ளிவாசல்களை மூடுவதென முடி வெடுக்கப்பட்டது.

இதில் புத்தளம் ஜம்இய்யதுல் உலமா, பெரிய பள்ளி, தில்லையடி பள்ளிவாசல் கள் சம்மேளனம் மற்றும் நகர பள்ளி வாசல்கள் இணைந்து நேற்று முதல் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மஸ்ஜித்களை மூடுவதென தீர்மானிக் கப்பட்டது.

எனவே சகல நிர்வாகிகளும் இவ் விடயத்தை கவனத்தில் எடுத்து செயற் படுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# சிறைக்குள் விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குள் கொவிட்-19 தொற்று பரவுவதை தடுக்கும் நோக் கத்துடன் அவசர திட்டம் அமுலாக்கப்படுகிறது.

சிறைச்சாலைகளுக் குள் கொரோனாத் தொற்றாள ர்கள் இனம் காணப்படும் பட்சத்தில் செயற்பட வேண் டிய விதமும் இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கேற்ப துரித நடவடிக்கை எடுக்கு மாறு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே சிறைச்சாலை உத் தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள் ளார்.

கைதிகளின் நடமாட்ட த்தை கட்டுப்படுத்தல், கைதி கள் வெளிவேலைகளில் ஈடுபடுத்துவதை தவிர்த் தல் போன்ற நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட வுள்ளன.

அவசர நிலை ஏற்படு மானால் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசா லையை சிகிச்சை நிலை யமாக பயன்படுத்துவதற் கும் திட்டமிடப்படுகிறது. (ஜ-4)

# அரச ஊழியர்களுக்கு அறிவிப்பு


(கொழும்பு)

கொரோனா அச்சம் காரணமாக அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றும் முறையை மீண்டும் நடை முறைப்படுத்துமாறு அரச நிறுவனங்களுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் பி.பி.ஜெயசுந்தர விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது. இதற்கமைய மேல் மாகாணத்தில் உள்ள அரசு ஊழியர்களும் நாட்டின் ஏனைய பிரதான நகரங்களில் உள்ள அரச நிறுவனங்களில் பணியாற்றுபவர்களும் வீட்டிலிருந்து பணியாற்ற நடவடிக்கை மேற்கொள்ளும்படி அரச நிறு வனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

# தனி நபரை முன்னிலைப்படுத்தி இ.தொ.கா. முடிவு எடுக்காது

## நாடும் சமூகமுமே முக்கியம் என்கிறார் ஜீவன்



(கொழும்பு)

நாடு மற்றும் மலையக மக்களின் நலனை முன்னி லைப்படுத்தியே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடி வுகளை எடுக்கும். தனி நபர்க ளுக்காக ஒருபோதும் தீர்மான ங்களை எடுத்ததில்லை. இனி எடுக்கப்போவதுமில்லை."-என இ.தொ.காவின் பொதுச் செய லாளரும், இராஜாங்க அமைச் சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தலவாக்கலை நகரசபை யின் புதிய தலைவராக நியமிக் கப்பட்டுள்ள பாரதிதாசன் நேற்று முன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். இதற்கான நிகழ்வு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலை மையில் நடைபெற்றது. இந்நி கழ்வின் பின்னர் சமகால அர சியல் நிலவரங்கள் தொடர்பில் ஜீவன் தொண்டமான் ஊடகங் களிடம் கருத்து வெளியிட்டார். இதன் போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

# தங்கம் கொள்ளை

(கொழும்பு)

பொதுச் சுகாதாரப் பரிசோ தகர்களாக தம்மை அடையா ளப்படுத்திக்கொண்டு கொள் ளைச்சம்பவத்தில் ஈடுபட்ட மூவ ரைத் தேடி விசேட விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பி.சி.ஆர்.பரிசோதனையை முன்னெடுக்கப்போவதாக தெரி வித்த மஹவ கெத்தப்பஹுவ பகுதியில் வீடொன்றில் சுமார் மூன்றரை பவுண் தங்கம் கொள் ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலி ஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ஜ-4)

# கடல் புறா

## அழைப்பு




மீண்டும் நகைத்த அநபாயன், "கருணாகரா! கலிங்க மன்னர் இருவரும் இப்படியே நடந்து கொண்டு, சோழநாடு கலிங்கத்தை ஒருநாள் வெற்றிகொள்ள நேர்ந் தால், உன்னைத்தான் நான் கலிங் கத்தின் அரசபீடத்தில் உட்கார வைப்பேன்" என்று பதில் கூறினான்.

"ஏன் அத்தனை பெரிய பதவி எனக்கு?"

"உன் கருத்து கலிங்க மன்னர் கள் கருத்தை ஒத்திருக்கிறது. ஆகவே கலிங்கத்தை ஆள்வதற்கு அவர்களுக்கு அடுத்தபடி நீதான் தகுதி!"

"அப்படியா?" இளையபல்லவன் குரலில் கோபம் மண்டிக் கிடந்தது.

அந்தக் கோபத்தை அதிகரிக்க இஷ்டப்பட்டவன் போல் மீண்டும் சொன்னான் அநபாயன்: "நீ நினைத் தது போல்தான் பீமனும் நினைத் தான், அனந்தவர்மனும் நினைத் தான்."

"அப்படி நினைப்பதுதானே இய ல்பு?" இளைய பல்லவன் குரலில் உக்கிரம் ஏறிக் கொண்டிருந்தது.

அதைக் கவனிக்காமலே விளக் முற்பட்ட அநபாயன், "இயல்பு அது தான் கருணாகரா, அந்த இயல்பை உணர்ந்து அதை மீறி நடந்த தால்தான் உங்களை மீட்க முடிந்தது. காவலிருக்குமிடத்தில் அசிரத்தை யிருப்பது இயல்பு. அந்த அசிரத் தையை நான் பயன்படுத்திக் கொண்டேன்.

நான்கு சுவர்கள் தங்களுக்குப் பெரும் பாதுகாப்பு என்று நினைப்பது மனித இயல்பு. ஆகவே சிறைக் கூடத்திலும் நீதிக் கூடத்திலும் நான் துணிவுடன் நுழையமாட்டேன் என்று அனந்தவர்மனும் பீமனும் நினைத்தார்கள். ஆகையால் சிறைச் சாலையில் சிரத்தையற்று இருந் தார்கள்.

அங்கிருந்து நான் தப்பிப்பேன். நீதி மண்டபத்தில் அசிரத்தை யாயிருந்தார்கள். அங்கிருந்து உன் னைத் தப்புவித்தேன். பாலூர்ப் பெருந்துறையின் மக்கள் தொகை யில் மூன்றிலொரு பங்கு தமிழர்கள். அவர்களில் பெரும்பாலோர் வணி கர்கள். சிலர் படைப்பிரிவிலுமிருக் கிறார்கள்.

சிலர் சுங்கச் சாவடியிலிருக்கிறார் கள். தமிழர்களைத் தவிர சில வேங்கி நாட்டாரும் படையில் சேர்ந்திருக்கிறார்கள். இந்தக் கோதா வரிக்கு அக்கரையிலிருக்கும் வேங்கி நாட்டு அரியணையில் இன்று விஜயாதித்தன் அமர்ந்திருக் கலாம்.

ஆனால் அதில் அமர வேண்டி யவன் நானாகையால் இங்குள்ள வேங்கி நாட்டவரில் பலர் என்னிடம் பக்தி கொண்டவர்கள். ஆகவே பாலூ ரில் கலிங்க மன்னர்களை ஆதரி ப்பவர்களை விட என்னை ஆதரிப் பவர்கள் தொகை அதிகம். சனத் தொகையில் மூன்றிலிரண்டு பங் கான வேங்கி நாட்டவரையும் தமிழ ரையும் ஒதுக்கிவிட்டால் மற்றவர் சிறுபான்மை.

தவிர என்றாவது ஒருநாள் வேங்கி நாட்டை என் வசப்படுத்த வேண்டுமானால் இங்குள்ள வேங்கி நாட்டவர், தமிழர் ஆகிய இருபாலார் உதவியும் எனக்குத் தேவையாயிருக்கும். அதனால்தான் அடிக்கடி சோழ நாட்டிலிருந்து இங்கு வருகிறேன். இங்கு வந்து போதிய பக்கபலத்தையும் திரட்டியிருக்கி றேன்.

இந்த அரசாங்கத்தின் ஒவ்வோர் இடத்திலும் என்னைச் சேர்ந்த வர்கள் இருக்கிறார்கள். சிலர் வணி கர், சிலர் படை வீரர், சிலர் மாலு மிகள். ஆனால் எல்லோரும் என் ஒற்றர்கள் பணத்தாலல்ல.

என்னிடம் பக்தியால் கட்டுப்பட்ட வர்கள். ஆகையால்தான் அவசி யமான வீரர்களைத் திரட்டிக்கொ ண்டு உங்களை விடுவிக்க முடிந்தது என்று சொல்லிக் கொண்டு போன வனை இடைமறித்துக் கேட்டான் இளையபல்லவன், "அப்படியானால் நீதி மண்டபத்தைச் சுற்றிக் காவல் அதிகமில்லையா?"

"இருந்தது. ஆனால் இருந்தவர் கலிங்கப் படையிலுள்ள வேங்கி தமிழ்நாட்டு வீரர்கள். அவர்களைக் காவலுக்கு அனுப்ப முன்னதாக ஏற்பாடு செய்தேன்" என்றான் அந பாயன் பதிலுக்கு.

"காவலரை அனுப்ப நீங்கள் ஏற் பாடு செய்தீர்களா? இளைய பல்ல வன் வியப்புடன் வினவினான்.

காவலரை அனுப்பும் அதிகாரம் படைத்தவர், சேனாதிபதியைப்போல் அத்தனை அதிகாரம் படைத்த வரல்ல. இருப்பினும் ஒரு தமிழர் அந்த வேலை பார்க்கிறார்" என்று சுட்டிக் காட்டினான் அநபாயன்.

பாலூர்ப் பெருந்துறை உண்மை யில் அநபாயச்சோழன் பாசறை என்பதை அறிந்து கொண்ட கரு ணாகர பல்லவன், அநபாயன் சிறை யிலிருந்து தப்ப முடிந்ததற்கும் தூதுப் புறா மூலம் செய்தியனுப்ப முடிந் ததற்கும் காரணங்களைப் புரிந்து கொண்டான்.

நீதி மண்டபத்தைச் சுற்றி நின்ற காவலரே தாங்கள் தப்புவதற்கு உதவியாயிருந்ததால்தான் தங்க ளைப் படையினர் யாரும் பின் தொட ரவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டான்.

இத்தனை வசதிகளிருந்தாலும் அனந்தவர்மனும் பீமனும் கலிங்க வீரர்களைக் கொண்டு தங்களைப் பிடிக்கக் கண்டிப்பாய் முயல்வார்களெ ன்பதையும், அடுத்த சில நாழிகை களில் பாலூர் நகரம் பூராகவும் பீம னுடைய வீரர்களால் சோதனை யிடப்படுமென்பதையும் சந்தேகமற அறிந்தானாகையால் அநபாயனை நோக்கிக் கேட்டான்: "நமக்கு இங்கு என்ன துணையிருந்தாலும் கலிங்க அரசாங்கத்தின் பலம் நம்மைச் சும்மா விடுமா?"

"விடாது கருணாகரா! விடாது. அவசியமானால் பாலூருக்கு வடக் கேயுள்ள கலிங்கர் படைப் பிரிவும் இங்கே வரவழைக்கப்படும். ஆகை யால்தான் இந்தத் தோப்புக்கு உங் களை அழைத்து வந்தேன். இங்கு உங்களை யாரும் தேடமாட்டார்கள். இங்கு சோதனைக்கு வீரர்கள் வந் தால் உங்களை ஒளித்து வைக்கும் சக்தி இவர்களுக்கிருக்கிறது.

இன்றிரவு எப்படியும் இந்தப் பாலூரை விட்டுக் கிளம்பிவிடத் தீர்மானித்திருக்கிறேன். அதற்கு வழி கண்டுபிடிக்க ஒருவரை நிய மித்திருக்கிறேன். அவர் வருவார்" என்றான்.

"யாரவர்?" என்று கேட்டான் கருணாகர பல்லவன்.

"வெளிநாட்டவர். உனக்குத் தெரி யாது அவரை. வந்த பின் அறிமு கப்படுத்தி வைக்கிறேன். அவர் வந்த பின்தான் நாம் வேறிடத்திற் குச் செல்ல வேண்டும்."

"எது அந்த இடம்?"

"அதைப்பற்றி அவரே சொல்லு வார்."

அதைப்பற்றி மேலும் ஏதோ கேட்க முயன்ற கருணாகரனை, "பொறு கருணாகரா!" என்று ஒரே வார்த்தையில் பேச முடியாமல் அடி த்த அநபாயன், ஏதேதோ யோச னைகளில் நீண்ட நேரம் ஆழ்ந் தான்.

பிறகு எதையோ திடீரென நினைத் துக்கொண்டு எழுந்து "கருணாகரா! இன்னும் சில நாழிகைகளில் மாலை நெருங்கும். அதற்குள் நான் ஒரு முக்கிய அலுவலைக் கவனித்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி, குடிசையை விட்டுப் புறப் பட்டு அந்த அடர்த்தியான தோப்புக் குள் புகுந்து சில விநாடிகளில் மறைந்தான்.

அநபாயன் போக்கு ஒவ்வொன் றும் விசித்திரமானயிருந்தது இளை யபல்லவனுக்கு. எதிரிகள் நாட்டில் வந்து அநபாயன் இஷ்டப்படித் திரிவதும் திடீரெனத் தோன்றுவதும் மறைவதும் பெரும் வியப்பாயி ருந்தது அவனுக்கு. பெரிய சாம்ரா ச்சியத்தின் அரியணையில் இவரல் லவா அமர வேண்டும்? என்று எண்ணினான்.

வீரராஜேந்திரருக்குப் பதில் அநபாயர் மட்டும் சோழ அரிய ணையில் இருந்தால் தமிழர் பாலூ ரில் படுத்தப்பட்ட பாட்டுக்குக் கலிங் கம் படு தூளாக்கப்படும் என்பதை உணர்ந்தான். அத்தகைய ஒரு வசதி சோழ நாட்டுக்கு இல்லாத தைக் குறித்துச் சிறிது வருந்தவும் செய்தான்.

வீரராஜேந்திரர் மகா வீரனா னாலும் அவர் சமாதானத்தையே விரும்புபவர் என்பதையும், பிறர் வீணாகப் போரிட வந்த காரணத் தாலேயே அவர் பெரும் போர்களில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடினா ரென்பதையும் உணர்ந்திருந்த இளையபல்லவன்,

போர் விருப்பமுள்ள அநபாயன் அரியணையில் இருந்திருந்தால் சோழ சாம்ராச்சியம் எத்தனை விரிவடையும் என்று சிறிது பேரா சையும் கொண்டான்.

இருப்பினும் அந்த எண்ண த்தை அடுத்த விநாடி அறுத்தெ றிந்தான். 'சேச்சே! போரில் விளை வது நாசம் அது உதவவே உத வாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். (தொடரும்)

# மர்மப்பெட்டி மீட்பு

(வவுணதீவு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்தில் வயல் காணி ஒன்றில் சந்தேகத்திற் கிடமான முறையில் இரும்புப் பெட்டி ஒன்று புதைத்து வைக் கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் விவ சாயி ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து படையினர் அதனை மீட்ட போது குறித்த பெட்டியில் மண் நிரம் பிக் காணப்பட்டது என வவுண தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுணதீவு, அரசடிச் சேனை வயல் பகுதியிலேயே இரும்புப்பெட்டி புதைந்து காண ப்பட்டுள்ளது. இந்நிலையில், வயல் வேலைக்குச் சென்ற விவசாயி அதனை அவதா னித்ததையடுத்து உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழ ங்கியுள்ளார்.

அதனையடுத்து நீதிமன்ற அனுமதியைப் பெற்று வவுண தீவு தாண்டியடி விசேட அதி ரடிப்படையின் குண்டு அகற்றும் பிரிவினரால் குறித்த பெட்டி நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தோண்டி எடுக்கப்பட்டது. அதன் போது அதில் மண் நிரம்பி யிருந்தது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் குறித்த பெட்டி ஆயுதங்கள் வைக்க பயன்ப டுத்தும் இரும்புப் பெட்டி என்ப துடன் இப்பிரதேசம் கடந்த காலங்களில் விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டுக்குள் இரு ந்த பிரதேசம் என்பது குறிப்பி டத்தக்கது. (ஜ-4)

# பணிக்கப்பட்டுள்ளவர்களைத் தவிர வேறு எவரும் நீதிமன்றில் நுழையாதீர்

## திருமலை நீதிமன்றம் உத்தரவு

(திருமலை)

நீதவான் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்குமாறு பணிக்கப் பட்டுள்ளவர்களைத் தவிர வேறு எந்த நபரும் திறந்த நீதிமன்றத்தினுள் நுழையக் கூடாது என திருகோணமலை நீதிமன்றம் அறிவித்தல் விடுத் துள்ளது.

நீதிமன்ற கட்டளைப்படி பதி வாளரால் திருகோணமலை நீதிமன்றத்திற்கு முன்னால் அறிவித்தல் ஒன்று காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"தண்டப்பணம் விதிக்கப்படு கின்ற நபராலேயே குறித்த தண்டப் பணத்தை செலுத்த முடியும் எனவும் நீதவான் நீதிமன்றங்களில் விளக்கம், விசாரணை, புதிய வழக்குகள் தீர்ப்பு கட்டளைக்காக நியமிக் கப்பட்டுள்ள வழக்குகளை தவிர்ந்த ஏனைய அனைத்து வழக்குகளும் கூப்பிடும் வழக்கு களுக்காக எதிரிகளோ /சந்தேக நபர்களோ திறந்த நீதிமன்றத்தி னுள் சமுகமளிக்கத் தேவை யில்லை எனவும் குறிப்பிட ப்பட்டுள்ளது.

குறித்த வழக்குகளில் அடுத்த வழக்கு திகதி பற்றிய அறிவித்தல் வழக்குத் தினத் தன்று காலையிலேயே அறி வித்தல் பலகையில் காட்சிப் படுத்தப்படும் எனவும் அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதவான் நீதி மன்றத்திற்கு பிணை ஒப்பம் இடுவதற்காக காட்சிப்படுத்தப் பட்ட பிரதிகளை பெற்றுக் கொள் வதற்காகவும் வருபவர்கள் 10.30 தொடக்கம் 11.30 வரை யான நேரத்தில் மாத்திரம் சமுகமளிக்க முடியுமெனவும் அறிவித்தல் பலகையில் திரு கோணமலை நீதிமன்ற கட்ட ளைப்படி பதிவாளரால் அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இவ்வறிவித்தல் அமுல் படுத்தப்படும் எனவும் நீதிம ன்றம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# வேகமாகப் பரவும் இரண்டாம் அலை



(கொழும்பு)

கொரோனாத் தொற்றின் இர ண்டாம் அலையானது மிக வேகமாகப் பரவி வருவதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

"மேல்மாகாணத்திலேயே அதிக கொரோனாத் தொற்றா ளர்கள் அடையாளம் காணப் படுகின்றனர். அதிலும் இம் முறை மிகவும் வேகமாக தொற்று பரவி வருகின்றது.

இது தொடர்பாக ஆராய்வ தற்காக விசேட பரிசோதனை கள் ஸ்ரீஜயவர்தனபுர பல்க லைக்கழகத்தில் முன்னெடுக் கப்பட்டுள்ளது. கந்தகாடு, பேலி யகொட, மினுவாங்கொட ஆகிய பகுதிகளில் அடையாளம் காண ப்பட்ட தொற்றாளர்களின் மாதி ரிகளைக் கொண்டு இந்த பரி சோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த ஆய்வு அறிக்கையும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.(ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2158

### மதன்

அழகு திரும்பி பார்க்க வைக்கும்...



ஆனால் அன்பு திரும்ப திரும்ப நினைத்து பார்க்க வைக்கும்...!

### அமன்

உண்மையாக நேசிப்பவரால் ஒரு நாள் கூட பேசாமல் இருக்க முடியாது...



நேசிப்பது போல் நடிப்பவர் எத்தனை நாள் ஆனாலும் பேசாமல் இருப்பார்கள்...

### செந்தில்

மனதில் உண்மையான பாசம் வைத்திருப்பவர்கள் பொய்யாக நடிக்கவும் மாட்டார்கள் விட்டு விலகவும் மாட்டார்கள்...!




### குமார்




### குலழி




### வரதன்



இது தெரியாம இவ்வளவு நாள் கையாள உடைச்சுக்கிட்டு இருந்தேனப்பா...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 218

# வருமுன் காப்பதும் வந்தபின் எம்மைத் தனிமைப்படுத்தி நம்தோட்டத்தில் உணவுற்பத்தி செய்யலாம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கொரோனாவின் தாக்கம் பரந்துபட்ட அளவில் உலகளாவிய ரீதியில் மக்களை இன்னல்களுக்குள்ளாக்கி வருகின்றதனை காணமுடிகின்றது. இந்நேரத்தில் மக்களனைவரும் விழிப்புணர்வுடனும்பொறுப்புணர்ந்தும் மருத்துவ உலகின் ஆலோசனைகளைப் பின்பற்றி நடந்து கொள்ளல் வேண்டும்.

கவலையீனமாக நாம் செய்யும் அல்லது அசட்டையாக செய்யும் எந்தக் காரியத்தினாலும் இவ்வாறான தொற்றுதல்களுக்குள்ளாவதுடன் எமது குடும்பத்தாரையும் அயலவரையும் எம்முடன் பணிபுரிபவர்களுக்கும் இந்தத் தொற்றுதலை ஏற்படுத்துபவராக மாறிவிடுகின்றோம்.

வயதுவேறுபாடின்றிகொரோனாத் தொற்றுதல் மக்களிடையே ஏற்பட்டாலும் வீடுகளில் நோய்வாய்ப்பட்டவர்கள் குறிப்பாக வயதானவர்கள் தொற்றுதலுக்குட்பட்டால் எதுவும் செய்ய முடியாது போய்விடும் என்பதனை அவசியம் அனைவரும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

நோய் தொற்றுதல் என்பது எம்மை அறியாமல் அது எம்மில் தொற்றிக் கொள்வதாகும். அன்றாட வேலைகளுக்காக நாம் செல்லும் இடங்களில் பயணிக்கும் பிரதேசங்களில் நோய்த்தொற்றுக்குள்ளானவர் இருந்தால் எமக்கும் அந்த தொற்று வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமானதாகும்.

ஒருவர் தொற்றுக்குள்ளானால் அவரின் குடும்ப உறுப்பினர்கள், சுற்றத்தார், தொற்றுக்குள்ளானவர் சென்றுவந்த இடங்களென அனைவரையும் கவனிப்புக்குள் வைத்திருக்க வேண்டிய நிலையை எய்துகின்றோம்.

ஆகையினால் நாம் பல விடயங்களில் இந்தத் தொற்றுதல் வராமல் வருமுன் எம்மைக் காத்துக்கொள்ளலாம். நாம் அனைவரும் ஒற்றுமையாக அரசும் மருத்துவ உலகும் எடுத்துச்சொல்லுகின்ற அறிவுரைகளைப் பின்பற்றி நம்மையும் நாம்சார்ந்த அனைவரையும் காப்பாற்றிக் கொள்வது மிக மிக அவசியமானதாகும்.

இது தேசநலன் சார்ந்த அனைவரினதும் முழுமையான பங்களிப்பாகும்.

1.தேவையற்று வீட்டை விட்டு வெளியில் செல்வதனை தவிர்க்கவும்

2.சென்று வந்தால் வீட்டுக்குள்ளே செல்லுமுன் கைகளை, கால்களை சவர்க்காரம் பயன்படுத்தி நுரைக்கவிட்டு கழுவி முடிந்தால் முழுகிவிட்டு உட்செல்வது நல்லது. தேனீக்குடிகளில் இந்தவகையான பழக்கம் இருக்கின்றதனை கவனியுங்கள்!

3.அணிந்திருக்கும் உடைகளை அவசியம் கழுவிவிடவேண்டும். சவர்க்கார நுரையை உண்டாக்கி கழுவிவிடல் நல்லது. வெறுமனே நீரில் அலசி காயவிடுவது முழுமையான பயன்தராது.

4.உடைகளை சூரியஒளி முழுமையாக படும்படிவைத்து உலர்த்துவது நல்லது.

5.நாம் எம்மைக் கழுவினாலும் நாம் அணிந்திருக்கும் நகைகள், பயன்படுத்தும் இரும்பிலான திறப்புக்கள், வாகனங்களின் கைப்பிடிகள், உணவு உண்ணும் கோப்பைகள், சிறிய கோப்பைகள் என்பவற்றினூடாகவும் இது பரவவாய்ப்புக்கள் உண்டு. கைச்சுத்திகரிப்பானை **(Sanitizer)** கையுடன் வைத்திருந்து அடிக்கடி அதனால்கையை சுத்தப்படுத்திக் கொள்ளுதல் நல்லது. குறிப்பாக செல்பேசி பயன்படுத்துவோருக்கு இந்த வைரஸ் செல்பேசியில் 4 மணித்தியாலங்களுக்கு மேல் உயிருடன் இருக்கும என செய்திகள் தெரிவிப்பதனால் அவசியம் அதனைப் பயன்படுத்தும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

6.ATM அட்டையைப் பயன்படுத்தி இயந்திரத்திலிருந்து பணம் பெறுவோர் மிகவும் அவதானமாக எந்தவிதத் தொற்றுக்குள் உள்ளாகாமல் பணத்தைப் பெற்றுக்கொள்வது நல்லது. வங்கிகளில் அறிவிக்கப்படும் சுகாதார நடைமுறைகளை அவசியம் கடைப்பிடித்தல் வேண்டும்.

7.முகமூடியை முழுமையாக அணிதல் அவசியமாகும். வெறுமனே நாடிப்பகுதிக்கு மட்டும் அணிந்து செல்வதால் எந்தப் பயனும் கிடையாது. பயன்படுத்திய முகமூடிகளை எரித்து விடுதல் நல்லது. வீதிகளில் எறிந்து விட்டு செல்லக்கூடாது. அவற்றை கழிவுகளுடன் சேர்த்து சொப்பிங் பைகளில் உள்ளடக்கி வீதிகளில் எறிந்துவிட்டு செல்வதையும் காணலாம். பொறுப்பற்று நாம் இத்தருணத்தில் நடக்கக்கூடாது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 301




8.சமூக இடைவெளியை அவசியம் நாம் பின்பற்றல் வேண்டும். அவசரமான உலகத்தில் அவசரப்பட்டு தொற்றுக்குள்ளாகி அவசரமாகவே இவ்வுலகைவிட்டு சென்றுவிட துடிக்கவேண்டாம்.

9.நோய்த்தொற்றுக்குள்ளாகியிருந்தால்அல்லது கொரோனா 19 இற்கான அறிகுறிகளை கொண்டிருந்தால் அதனை மறைக்காது அருகிலுள்ள வைத்தியசாலையை நாடுதல் சிறந்தது. அல்லது சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கலாம்.

மேற்கூறிய விடயங்களை ஒவ்வொரு நேரத்திலும் நாம் கடைப்பிடிப்பது சிரமமாகவே இருக்கும். ஆனாலும் எமதும் எமது குடும்பத்தினதும் பாதுகாப்புக் கருதி வருமுன் காப்பதற்கான நடைமுறைகளை சுகாதாரத்திணைக்களமும் வைத்தியசாலைகளிலும் அறிந்து கொள்ளும் அதேவேளை நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளுக்கு நாம் மறுப்பு தெரிவிக்காமல் செய்ய வேண்டியது எமது கடமையாகும்.

வருமுன் வந்தபின் எம்மைக் காப்பாற்றும் செயற்பாடுகளுக்கு அப்பால் நாம் விரும்பியோ விரும்பாமலோ தற்போது ஒருவகையான வீட்டுக்குள்ளிருந்து வேலையைச் செய்வதற்கான காலமாக மாறிவிட்டிருக்கின்றது. இதனை நாம் வினைத்திறனாக மாற்றிக் கொண்டால் எமது வேலையில் தடங்கலில்லாமலும் எமக்கான பாதுகாப்பினை உறுதி செய்வதாகவும் அமையும்.

வீட்டிலிருந்து நாம் செய்யும் அன்றாட வேலைகளுடன் எமக்கான உணவை நாமே உற்பத்தி செய்வதற்கான செயலிலும் இறங்கலாம். எமது வீட்டிலிருக்கும் இடத்தை முழுமையாக பயன்படுத்திக் கொண்டால் சரியாக திட்டமிட்டால் வீட்டிலொரு தோட்டம் தயாராகிவிடும்.

வீட்டில் அகத்தி, முருங்கை உள்ளிட்ட இலைக்கறி வகைகளைத் தெரிந்தெடுத்து பயிரிடுங்கள். உங்கள் வீட்டுக்கு தேவையான அளவில் அதனை ஆரம்பத்தில் பயிரிட்டுக் கொள்ளலாம். இவற்றைவிட மண்புழு உர அலகு ஒன்றையும் நீங்கள் உருவாக்கினால் வீட்டிலிருந்து வருகின்ற சேதனக் கழிவுகளை விரைந்து சேதன உரமாக மாற்றி பயிர்களுக்கு இடலாம்.

கிடைக்கின்ற முட்டைக்கோதுகளை நொருக்கி பசளையாக இடுங்கள். தாவரங்களை அதிகம் வளர்ப்பதால் நீர்தேங்கும் நிலைமை தோன்றலாம். ஆதலினால் நீர்தேங்கி நிற்காதவாறு பார்த்துக் கொண்டால் போதுமானது.

உணவாகக்கொள்ளக்கூடிய மூலிகைத்தாவரங்களை பயிரிடுவது நல்லது. கவனிப்பும் அதிகம் தேவைப்படாது. அதிகளவிலான உள்ளீடுகளையும் பயன்படுத்தத் தேவையில்லை. இவை தவிர பழமரங்களை நடுகை செய்யுங்கள். இடவசதியைப் பொறுத்து மரவள்ளி மற்றும்கிழங்கு வகைத் தாவரங்கள் அனைத்தையும் நடுகை செய்யலாம். வீட்டில் மா, பலா, வாழை தவிர்ந்த அன்னமுன்னா, நெல்லி மற்றும் ஜம்பு நடுகை செய்யலாம். நடுகை செய்தவை கனியை தரும்போது அவற்றை முழுமையாக பயன்படுத்த முனையுங்கள். வீட்டுத் தோட்டத்திற்கான நடுகைப்பொருட்களை விரைந்து கிடைக்கச் செய்ய முனைப்புக்காட்டும் இவ்வேளையில் முழுமையாக வீட்டுத் தோட்டம் நிச்சயமாக எமது வாழ்க்கையில் நல்ல பாடத்தையும் எமக்கான முழுநேர உடற்பயிற்சியாகவும் மாறும். உங்கள் பகுதி கமநல வேலை நிலைய உத்தியோகத்தர்களை அணுகி வீட்டுக்கான விதைகள் மற்றும் நடுகைப்பொருட்களை பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

எமது உடலுக்கு தேவையான உடற்பயிற்சியை தவறாது செய்து உடலின் எதிர்ப்பு சக்தியை நாம் அதிகரித்து வைத்திருக்க வேண்டும். சமமாக உணவு, நிறையுணவு, ஊட்டச்சத்தான உணவினை கவனித்து உணவில் சேர்த்துக் கொண்டால் எமது உடலின் எதிர்ப்புச்சக்தி எம்மைக் காப்பாற்றிக் கொள்ளும். பாரம்பரிய உணவு முறைகளுக்குள் நாம் மீண்டால் இவற்றை நாம் விரைந்து பெற்றுவிடலாம்.

# பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து மீள் பரிசீலனை

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து பரிசீலனை மேற்கொள்வதற்காக சுகாதார பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான சுகாதார அணுகுமுறைகள் குறித்த எழுத்துமூல பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கிடையில் இணைய வழிக் கற்பித்தல் தொடர்பான மேற்பார்வை ஒன்றை செய்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதி இன்மை காரணமாக இந்த மேற்பார்வையை மேற் கொள்ள தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி-4)

# 22 பொலிஸாருக்கு கொரோனா

(கொழும்பு)


பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் உட்பட மொத்தம் 22 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் 400 இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு தனிமைப்படுத்தல் நிலையங்கள் உள்ளன. மேலும் வைரஸ் பாதிப்புக்குள்ளான பொலிஸாருக்கு சிகிச்சையளிக்க புனானை மற்றும் குண்டசாலை ஆகிய பகுதிகளில் சிறப்பு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம்ஏனைய பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா பரவாமல் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## ஊனுடம்பு ஆலயம்

(நேற்றைய தொடர்ச்சி...)

இதை அடிப்படையாகக் கொண்டுதான் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஔவையார் கூறினார். ஆலயம் என்ற சொல்லைப் பிரித்துப் பார்த்தால், நமக்கு அதன் அர்த்தம் தெரிய வரும்.

"ஆ" என்பதற்கு ஆன்மா என்று பொருள். "லயம்" என்றால் ஒன்று சேரும் இடம் என்று பொருள். ஆக கடவுள் திருவடியில் ஆன்மாக்கள் ஒன்று கூடும் இடத்தைத்தான் ஆலயம் என்கிறோம்.

அதுபோல கோவில் என்பதில் "கோ" என்பது கடவுளையும் "இல்"என்பது தங்கும் இடத்தையும் குறிக்கும். கோவில் என்றால் இறைவன் தங்கும் இடம் என்று அர்த்தமாகும். ஜீவாத்மாக்களான நாம், பரமாத்மாவான இறைவனுடன் ஸ்தூல முறையில் தொடர்பு கொள்ள அமைக்கப்பட்டதுதான் ஆலயம். இது ஒவ்வொரு உயிரிலும் இறைவன் இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. இதனால்தான் திருமூலர் "கடலுடையான், மலையான், ஐந்து பூதத்து உடலுடையான்" என்று கடவுளை பஞ்சபூதத் தொகுப்பாக காண்கிறார்.

அது மட்டுமின்றி...

**உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிராணார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே**

என்று திருமூலர் ஆலயத்தை வேறொரு முறையிலும் உடம்போடு ஒப்பிட்டுப் பாடினார்.

இதை தாயுமான சுவாமிகள்,

**"நெஞ்சகமே கோவில்**
**நினைவே சுகந்தம்**
**அன்பே மஞ்சன நீர்**
**பூஜை கொள்ள வாராய் பராபரமே**

என்று பாடினார்.

இப்படி நம் முன்னோர்கள் கடவுளையும், கடவுள் உறையும் ஆலயத்தையும் மனிதனோடு இணைந்து காட்டி இருப்பது போல உலகில் வேறு எந்த மதமும் இணைத்துக் காட்டியதில்லை.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் நம் மூதாதையர்கள் கட்டிய ஒவ்வொரு ஆலயமும் பஞ்சபூத சக்திகளை உள்ளடக்கிய அறிவியல் பூர்வமானது. அத்தோடு பிரபஞ்ச சக்திகள் அனைத்தையும் நமக்கு ஒரே இடத்தில் தரவல்லது.

இதனை "ஷேத்திரம் சரீர பிரஸ்தாரம்" என்பார்கள்... அதாவது கோவில்கள் நமது உடம்பின் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன என்று பொருள்.

ஒரு சித்தர் மனிதர்களின் நெற்றியை "சிவன் விளையாடும் தெரு" என்றார். மற்றொரு சித்தர், "உள்ளே இறை உறைகிறது என்று உணர்ந்தேன். அதனால் தினமும் திருநீறு பூசி குங்குமம் இடுகிறேன்" என்றார்.

எனவே தினமும் நெற்றியில் திருநீறு பூசிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வழிபாட்டின் அடுத்த பரிணாம வளர்ச்சியாகவே ஆலயங்களில் பஞ்சபூதங்கள் மட்டுமின்றி நவக்கிரக சக்திகளும் இடம் பெறத் தொடங்கின. இதன் காரணமாகவே ஆலயங்களில் நவக்கிரக சந்நிதி இடம் பெற்றது.

பஞ்சபூத சக்திகளான ஐந்தும் நவக்கிரக சக்திகளான ஒன்பதும் சேர்ந்தால் மொத்தம் 14 சக்திகளும் கோவில்களில் அடங்கியுள்ளன. எனவேதான் "கோவில் இல்லாத ஊரில் குடி இருக்காதீர்கள்" என்றனர்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## வாகனத்தில் இருந்தவாறே பி.சி.ஆர்.பரிசோதனை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலை வாகனத்தில் இருந்தவாறே பி.சி.ஆர்.பரிசோதனையை செய்து கொள்ளக்கூடிய புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ் வசதி மூலம் தாமாக பி.சி.ஆர்.சோதனை செய்து கொள்ள விரும்புவர்கள் வைத்தியசாலை மற்றும் பி.சி.ஆர்.பரிசோதனை நிலையங்களுக்கு செல்லாமல் வாகனத்திலிருந்தவாறே பி.சி.ஆர்.சோதனையை செய்து கொள்ளமுடியும்.

எனினும், சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் வைத்தியசாலைகள் பி.சி.ஆர்.சோதனைகளுக்கு அறவிடும் கட்டணம் குறித்து சர்ச்சை எழுந்துள்ளது. (நி-4)

## வளி மாசு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் வளி மாசு மட்டத்தின் அளவு அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளது.

தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி, புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கடந்த 27 ஆம் திகதி முதல் இவ்வாறு அசாதாரணமான முறையில் வளி மாசு அதிகரித்து வருகிறது.

இந்திய துணைக் கண்டத்தின் மேல் வானத்தின் வளி மாசு எமது நாட்டின் வளிமண்டலத்திற்குள் நுழைவதனாலேயே இவ்வாறு வளி மாசு அதிகரித்துள்ளது. (ஜ-4)

## ஊரடங்கை மீறிய 24 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட நாள் முதல் இதுவரையில் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 259 ஆக அதிகரித்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இந்த காலப்பகுதியில் 178 வாகனங்களும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 140 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 130 | 150 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 100 | 60 |
| கோவா | 80 | 120 | 100 | 120 |
| கரட் | 120 | 180 | 200 | 160 |
| பூசணி | 60 | 40 | 50-60 | 80 |
| புடோல் | 50 | 100 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 | 100 |
| சின்ன.வெங்காயம் | 250 | 220 | 260 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 120 | 160 |
| பாகற்காய் | 250 | 250 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 80 |
| பயற்றங்காய் | 260 | 180 | 120 | 200 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 50 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 120 | 200 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 140 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 180 | 140 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 250 | 250 | -- | — |
| முள்ளங்கி | 30 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 50 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | -- | — |



# சிறுவர் அரங்கம்

## முரட்டு ஆடு

ஒரு மலையடிவாரப் பகுதியில் சின்னஞ்சிறு வீடுகள் இருந்தன. அங்கு வாழும் மக்கள் தங்களது பிழைப்புக்காக ஆடு, மாடு இன்னும் பிற கால்நடைகளை வளர்த்து வந்தனர்.


அதன் அருகே அழகிய ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அங்கே ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அதனால் அங்கே மலையடி வாரத்தில் பச்சைப் பசேல் என்று புல் வளர்ந்திருந்தது.

அவர்கள் வளர்க்கும் ஆடுகள் மலையடிவாரத்தில் வளர்ந்துள்ள புல்லைத் தின்ன அங்கே மேய வரும். மாடுகளால் சரிவில் நிற்க முடியாததால் அவைகள் அங்கு வருவதில்லை.

அங்கே ஒரு முரட்டு ஆடு இருந்தது. கொம்புகள் இரண்டும் வளர்ந்து முறுக்கிக் கொண்டு நின்றன.

அது மேய்ந்து கொண்டிருக்கும் இடத்தின் அருகே வேறு ஆடுகள் வந்து விட்டால் அவைகளை முட்டி தூர விரட்டி விடும்.

ஒரு நாள் ஆற்றின் கரையோரம் மேய்ந்து கொண்டிருந்த ஆடு ஒன்று ஆற்றினோரம் வந்த முதலையைப் பார்த்து விட்டு பயந்து தப்பி ஓடி முரட்டு ஆடு மேய்ந்து கொண்டிருந்த இடத்தின் அருகே வந்து விட்டது.



முரட்டு ஆடு ஓடி வந்த ஆட்டைப் பார்த்து, "நான் மேய்ந்து கொண்டிருக்கும் இடத்திற்கு நீ எப்படி வரலாம்" என்று கோபமாகக் கேட்டது.

அதற்கு அந்த ஆடு, "அங்கே முதலையைப் பார்த்தேன். அதனால் வேகமாக ஓடி வந்து விட்டேன்" என்று அமைதியாக சொன்னது.

முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை. ஓடி வந்த அந்த ஆட்டுடன் சண்டை போட ஆரம்பித்தது. அந்த ஆடோ சண்டைப் போட விரும்பாமல் சமாதானமாகவே பேசியது. முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை.

வேறு வழியின்றி அந்த ஆடு முரட்டு ஆட்டுடன் எதிர்த்து நின்று ஆக்ரோஷமாக சண்டையிட்டது.

மலைச் சரிவான பகுதியில் இரண்டு ஆடுகளும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்பொழுது முரட்டு ஆடு கால் சறுக்கி மலையடிவாரத்தில் உருண்டு போய் ஆற்றில்விழுந்தது.

ஆற்றின் கரையோரம் வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்த முதலை அந்த முரட்டு ஆட்டை கவ்விக் கொண்டு ஆற்றினுள்ளே சென்று விட்டது.

**நீதி:**
**தான்தான் பெரியவன் தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற ஆணவம், திமிரு இருந்தால் நட்டம் நமக்கே.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

**ஜீலை-26**




தெரிந்தோ தெரியாமலோ நல்லது செய்திருக்கிறாள் ஒலிம்பியஸ். அவளுக்கு என் மானசீகமான நன்றி. எது எப்படியோ வீரம் அலெக்சாண்டரின் மனதுக்குள் விதைக்கப்பட்டால் சரிதான்.

மகனுடைய விருப்பமே தன்னுடையதாகவும் இருந்ததால் வீர விளையாட்டுக்கள், பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தார். வீர விளையாட்டுக்கள் என்றால்? அந்த வயதுக்கு ஏற்ற வாள் பயிற்சி, வில் பயிற்சி, மற்போர், குத்துச் சண்டை போன்ற சங்கதிகள்தான். ஆர்வம் பொங்க பயிற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான் அலெக்சாண்டர்.

விடியற்காலை நேரம், பூஜை புனஸ்காரங்களை எல்லாம் முடித்துக்கொண்டு தன்னுடைய நண்பனோடு வாள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தான் அலெக்சாண்டர்.

பெயருக்குத்தான் பயிற்சியே தவிர, உண்மையில் அது ஒரு போட்டியாகவே நடந்து கொண்டிருந்தது. அந்த வழியாக வந்த மன்னர் பிலிப் போட்டியைக் கவனித்தார். சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டிருந்தது. நின்ற இடத்தைவிட்டு நகராமல் போட்டியை ரசிக்க ஆரம்பித்தார் உன்னிப்பாக.

இன்னும் ஒரிரு நிமிடங்களில் வெற்றி அலெக்சாண்டருக்கு என்கிற மாதிரி நிலைமை. போட்டி மும்முரத்தில் இருந்த அலெக்சாண்டர் ஒரு கணம் நண்பனுடைய கண்களைப் பார்த்தான். என்னை விட்டுவிடு இந்த முறை நான் ஜெயித்து விடுகிறேன். விட்டுக் கொடுத்துவிடு- நண்பனுடைய பார்வை அப்படித்தான் பேசியது.

இதற்கு முன்னர் நடைபெற்ற பல போட்டிகளில் அலெக்சாண்டர்தான் வென்றிருக்கிறான். இந்த முறை மட்டும் ஏன் நண்பன் வெற்றி பெறக்கூடாது? சட்டென்று தன்னுடைய தாக்குதலின் வேகத்தைக் குறைத்தான்.

போட்டி சமநிலையை அடைந்து சில நொடிகளில் வெற்றி நண்பனின் பக்கம் போனது. அலெக்சாண்டரின் நண்பன்தான் வெற்றியாளன். குரு அறிவித்தார். மகனே அலெக்சாண்டர் தந்தையின் குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தான் அலெக்சாண்டர்.

வெற்றியை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக்கொடுக்காதே. அதைப்புறக்கணித்தால் அது உன்னைப் புறக்கணித்துவிடும். சரியா? சரி என்பது போலத் தலையை அசைத்துக் கொண்டான்.

(தொடரும்)

மனிதனுடைய மனோசக்தியைத் தன்வயப்படுத்தத்தக்க முறையில் செலுத்துவதே கல்வி எனப்படும். – போனஸ் அயர்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பூச்சாடிகளில் எல்லாம் மரக்கறிகள் காய்க்கட்டும்

எம் அன்புக்குரிய உறவுகளே! ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்ப பேசுவது எவ்வளவு வெறுப்பைத் தரும் என்பது நமக்கு நன்கு புரியும்.

இருந்தும் நம் நாட்டு நிலைமை காரணமாக சில விடயங்களைத் திரும்பத் திரும்ப பேச வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அந்த அடிப்படையில், கொரோனாத் தொற்றுக் காரணமாக எந்த நேரமும் நாடு முடங்கக்கூடிய சூழமைவு தெரிகிறது.

நாடு முடங்கினால், முன்புபோல அங்கும் இங்கும் திரியலாம் என்று எவரும் எண்ணிவிடக்கூடாது.

மாறாக எதிர்வரும் நாட்களில் நாடு முடங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், எவரும் வெளியில் செல்ல முடியாது என்ற சட்டம் மிக இறுக்கமாகப் பின்பற்றப்படும்.

எனவே வீட்டுக்குள் இருக்கும்போது எங்களின் சீவனோபாயம் எப்படியாக அமையும் என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காசு இருக்கிறது. ஆனால் கடை இல்லை. பணம் இருக்கிறது. உணவுப் பொருட்கள் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்.

எனவே எத்தனை நாட்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தாலும் எம் வீட்டுத் தோட்டத் தில் உள்ள வெண்டியும் கத்தரியும் முளைக்கீரையும் மூலிகைகளும் எமக்குக் கறியாகும்.

வீட்டில் வளர்த்த தென்னையில் பறித்த தேங்காய்கள் எமக்கும் போதும்.

கூடவே பயிற்றங்காய், பாகற்காய், பச்சை மிளகாய், கறிவாழை, கதலிக்குலை என எல்லாம் எம் வீட்டில் இருக்கிறது என்றால், பஞ்சம் ஏது? பசி ஏது?

இதைக்கூறும்போது நகரத்துச் சீவியத்தில் நிலம் எது? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் நீங்கள் வீட்டில் வைத்திருக்கின்ற பூச்சாடிகள் இருக்கின்றதே அதில் வெண்டி நடலாம், கத்தரி வைக்கலாம், புடோல், பாகல் அனைத்தும் நாட்டலாம். அவையும் பூக்கும் காய்க்கும். அவற்றின் அழகுக்கு ஏது எல்லை.

ஆக, அன்புக்குரிய உறவுகளே! கொரோனாத் தொற்றில் இருந்து எங்களைப் பாதுகாப்பதுடன் பூச்செடிகள் வைத்துப் பராமரிக்கின்ற பழக்கத்தைச் சற்றே மாற்றி, அதில் மரக்கறி வகைகளை நாட்டினால் எங்கள் வீட்டுத் தேவைக்கான மரக்கறிகள் எங்கள் வீட்டிலேயே கிடைக்கும்.

மருந்தற்ற, இரசாயனப் பதார்த்தங்கள் அற்ற தூய்மையான மரக்கறிகளை நாங்களே விளைவித்து உண்ணும்போது அது உடலுக்கும் உள்ளத்துக்கும் சமூகத்துக்கும் ஆன்மிகத்துக்கும் மிகுந்த ஆரோக்கியத்தைத் தரும்.

## சாவகச்சேரியிலும் கடல் பெருக்கு; இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு

(சாவகச்சேரி)

கச்சாய் கடல் பெருக்கெடுத்து சாவகச்சேரி - மகிழங்கேணி கிராமத்திற்குள் நேற்று வெள்ளிக்கிழமை காலை உட்புகுந்ததனால் அங்குள்ள இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

மழை மற்றும் காற்று போன்ற எந்த விதமான காரணங்களும் இன்றி கடல் தானாக பெருக்கெடுத்து ஊர்மனைகளுக்குள் புகுந்து வருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடல் பெருக்கெடுப்புக் காரணமாக குழந்தைகள், முதியவர்கள் பாதிப்பை எதிர்கொள்ளும் அதே வேளையில் வாழ்வாதாரத்திற்காக வளர்க்கும் கால்நடைகளைப் பராமரிப்பதிலும் அம்மக்கள் இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர்.

நாளுக்கு நாள் கடல் பெருக்கு அதிகரித்து வருவதனால் தாம் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி மகிழங்கேணி கிராமத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட காணி இல்லாத குடும்பங்களுக்கு கடந்த 2016 ஆம் ஆண்டு தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் காணி பகிர்ந்தளிக்கப்பட்டது.

அன்றிலிருந்து இன்று வரை அம் மக்கள் வீட்டுத் திட்டத்தினை எதிர்பார்த்து தமக்கு வழங்கப்பட்ட காணிகளில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்து வருகின்றனர்.

இவ்வாறு வசித்து வரும் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சூறாவளி, மழை வெள்ளம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு தொடர்ச்சியாக முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த மக்களுக்கு கடந்த ஆட்சிக்காலத்தில் மாதிரி வீட்டுத் திட்ட கிராமம் ஒன்றிற்கான அடித்தளம் அமைக்கப்பட்ட நிலையில் அவை சில பல காரணங்களால் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

## புனரமைப்பில் முறைகேடு மக்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்மடு பொதுநோக்கு மண்டப புனரமைப்பில் முறைகேடு உள்ளதாக தெரிவித்து அக் கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்மடு பாடசாலைக்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நேற்று இடம் பெற்றது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், கல்மடு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கல்மடு, சாளம்பன், பூம்புகார், முல்லைக்குளம், ஈஸ்வரிபுரம் ஆகிய கிராமங்கள் உள்ளன.

இக் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு என பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் பணத்தில் பொதுவான கட்டடமாகவுள்ள பொது நோக்கு மண்டபத்தை புனரமைக்க ஐந்து கிராம மக்களும் இணங்கினர்.

இதற்கமைவாக கல்மடு மாதர் அபிவிருத்திச் சங்கம் அதற்கான கட்டட புனரமைப்பு ஒப்பந்தத்தைப் பெற்று அதனை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினரான மங்களராஜா என்பவருக்கு வழங்கியிருந்தனர்.

கட்டட புனரமைப்பின் போது பொது நோக்கு மண்டபத்தில் இருந்து ஓடுகள் கழற்றப்பட்டு தற்போது சீற் போடப்படுகின்றது. இதன்போது அதற்கு பயன்படுத்தும் மரங்கள் இக்கட்டடத்தில் இருந்த 15 வருட பழமையான மரங்கள்.

புதிய மரங்கள் முழுமையாக மாற்றப்படவில்லை. இதனால் சில காலங்களில் கூரை உடைந்து விழும் அபாயமுள்ளது.

இதனால் தமது மண்டபத்தை சரியான அளவில் மரங்களைப் போட்டு புனரமைத்து தருமாறும் அதற்கு ஒதுக்கிய பணத்தை சரியாக பயன்படுத்துமாறும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்தனர். (ஜ-250)

## மோட்டார் சைக்கிள்கள் வழங்கல்

(வவுனியா)

கொரோனா-19 தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கையை துரிதப்படுத்தும் முகமாக வவுனியா மாவட்ட சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்று இந்நிகழ்வு இடம் பெற்றது.

கொரோனா தொற்றை தடுக்கும் வகையில் தமது உயிரைப் பணயம் வைத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பொது சுகாதார பரிசோதர்களுக்கு அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைவாக மத்திய வங்கியின் நிதி உதவியில் சுகாதார அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் மோட்டர் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் வவுனியாவில் தெரிவு செய்யப்பட்ட 12 சுகாதார பரிசோதகர்களுக்கு இவ்வாறு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அப்பாச்சி ரக மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன், தொற்று நோயியல் வைத்திய நிபுணர் எஸ்.லவன், ஆகியோரினால் இவ் மோட்டார் சைக்கிள்கள் சுகாதார பரிசோதகர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வைத்தியர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-4-5-250)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### இரண்டிற்கும் வாழ்த்துக்கூறு

❖ பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.

❖ உற்சாகத்துடன் இருக்கத் துவங்குவது தான், நீ ஆன்மிக வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறி.

❖ நீ செய்த தவறுகளை வாழ்த்து அந்தத்தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல் வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்.

❖ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.

❖ அடுத்தவர்களின் பாதையைப் பின்பற்றக்கூடாது. காரணம் அது அவர்களுடைய பாதை, உன்னுடையதுஅல்ல. உன்னுடைய பாதையைக் கண்டுபிடித்து விட்டால், அதன்பிறகு நீ செய்ய வேண்டியது எதுவும் இல்லை.

❖ கடவுள் விருப்பு வெறுப்பற்றவர். உலகம், உயிர்கள், அண்ட சராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

# வெற்றியில் திளைத்தது சென்னை



ஐ.பி.எல்.இருபது-20 தொடரில் 49 ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

டுபாயில் நடைபெற்ற இப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி, முதலில் களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 53 ஓட்டங்கள் பெற்றிருந்த போது தனது முதல் விக்கெட்டை இழந்தது.

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான சுப்மன் கில் 26 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய சுனில் நரேன் 7 ஓட்டங்களுடன் ஏமாற்ற அடுத்து களமிறங்கிய ரிங்கு சிங் 11 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து இழக்கப்பட்டாலும் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான நிதிஸ் ராணா சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

இவரும் துரதிர்ஷ்டவசமாக 17 ஆவது ஓவரின் முதல் பந்தில் 87 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஓய்வறை திரும்பினார்.

இதனையடுத்து களமிறங்கிய அணித்தலைவர் இயன் மோர்கன் 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார்.

தினேஷ் கார்த்திக் 21 ஓட்டங்களுடனும் திரிபத்தி 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்திலிருக்க, கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 172 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பந்து வீச்சில் லுங்கி இங்கிடி 2 விக்கெட்டுக்களையும் மிச்செல் சாட்னர்,ரவீந்திர ஜடேஜா மற்றும் கரண் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 173 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 50 ஓட்டங்கள் பெற்றிருந்த போது தனது முதல் விக்கெட்டை இழந்தது.

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஷேன் வோட்சன் 14 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து களமிறங்கிய அம்பத்தி ராயுடு 38 ஓட்டங்களுடன் ஆறுதல் அளிக்க அடுத்து களமிறங்கிய டோனி ஒரு ஓட்டத்துடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

சாம்கரண் 13 ஓட்டங்களுடனும் ரவீந்திர ஜடேஜா 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் சென்னை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (ஐ-4)

# ருதுராஜ் கெய்க்வாட் வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்துகிறார்

## டோனி பாராட்டு






ருதுராஜ் கெய்க்வாட் தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்தி வருகிறார் என சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் எம்.எஸ்.டோனி பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற 49 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் 6 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்சை தோற்கடித்தது.

முதலில் விளையாடிய கொல்கத்தா அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 172 ரன் எடுத்தது. அதிகபட்சமாக நிதிஷ்ராணா 87 ரன்கள் குவித்தார். பின்னர் விளையாடிய சென்னை அணியில் தொடக்க வீரர் ருதுராஜ் கெய்க்வாட் 53 பந்தில் 72 ரன்கள் எடுத்தார். கடைசி கட்டத்தில் ஜடேஜா அதிரடியாக விளையாடினார்.

கடைசி ஓவரில் அணிக்கு 10 ரன்கள் தேவைப்பட்டன. இதில் 5-வது பந்தை ஜடேஜா சிக்சர் விளாசினார். கடைசி பந்தில் 1 ரன் தேவைப்பட்ட நிலையில் அந்த பந்தையும் சிக்சர் அடித்தார்.ஏற்கனவே பிளேஒப் சுற்று வாய்ப்பை இழந்துவிட்ட சென்னை அணிக்கு இது 5-வது வெற்றி (13 ஆட்டம்) ஆகும்.

கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடியில் களம் இறங்கிய கொல்கத்தா தோல்வியை சந்தித்துள்ளது. இதன் மூலம் அந்த அணியின் பிளேஒப் சுற்று வாய்ப்பு மங்கியுள்ளது.

வெற்றி குறித்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கப்டன் டோனி கூறியதாவது:-

இந்த ஆட்டத்தில் எங்களது திட்டங்கள் சாதகமாக சென்றது என்று நினைக்கிறேன். டொஸ்ஸில் ஜெயித்தது மகிழ்ச்சி அளித்தது. இந்த சீசனில் ஜடேஜா அற்புதமாக விளையாடினார். எங்களது அணியில் அவர் மட்டும் தான் கடைசி கட்ட ஓவர்களில் ரன்களை எடுத்தார். விளையாடாத வீரர்களுக்கு நாங்கள் வாய்ப்புகளை வழங்க விரும்புகிறோம். அதை அவர்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்.

ருதுராஜ் கெய்க் வாட்டை வலைப்பயிற்சியின் போது பார்த்தோம். ஆனால் அவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டார். அதில் இருந்து அவர் மீண்டு வர 20 நாட்கள் ஆனது. ருதுராஜ் கெய்க்வாட் தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்தி வருகிறார். அவர் மிகவும் திறமையான வீரர்களில் ஒருவர். அவர் நிறைய பேசும் நபர் அல்ல. எனவே சில நேரங்களில் நிர்வாகத்துக்கு ஒரு வீரரை அளவிடுவது கடினம்.அவரை முதல் ஆட்டத்தில் விளையாட வைத்த போது விரைவில் அவுட் ஆனார். நெருக்கடியால் அவர் வெளியேறினாரா? அல்லது அவரது இயல்பான விளையாட்டா? என்பதை சொல்வது கடினம். ஒரு வீரரை பற்றி கணிக்க ஒரு பந்து மட்டும் போதாது.

நாங்கள் பிளேஒப் சுற்றுக்கு முன்னேறவில்லை என்றாலும் இந்த தொடரில் எங்களது சிறப்பை வெளிப்படுத்துவது முக்கியம் என அவர் கூறினார். (ஐ-4)

# ஓபனிங் பட்டிங்கை எப்போதுமே விரும்புவேன்

## பென்ஸ்டோக்ஸ்



ராஜஸ்தான்ரோயல்ஸ் அணிக்காக விளையாடிவரும் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சு ஓல்-ரவுண்டர் பென் ஸ்டோக்ஸ் ஓபனிங்பட்டிங்கை விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சு ஓல்ரவுண்டர் பென்ஸ்டோக்ஸ் இவர் எப்போதுமே மிடில் ஓடர் வரிசையில்தான் களம் இறங்கி பட்டிங் செய்வார். ஐபில் தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். ராஜஸ்தான் அணியில் பென் ஸ்டோக்ஸ் தொடக்க வீரராக களம் இறக்கப்பட்டார். சில போட்டிகளில் சொதப்பியதால் விமர்சனத் திற்கு உள்ளானார்.

அதன்பின் மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதி ராக அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் அடித்தார்.

இவரது சதத்தால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு இன்னும் பிளேஒப்ஸ் சுற்று வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் எப்போதுமே தொடக்க வீரராக களம் இறங்க விரும்புவேன் என பென் ஸ்டோக்ஸ் தெரிவித்துள்ளார். (நி-4)

## டென்மார்க்...

வதியும் ஊரெழுவை சேர்ந்த இளைஞன் ஒருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், உலகளாவிய ரீதியில் கொரோனா அச்சம் நிலவி வருவதுடன், இலங்கையிலும் கொரோனாவின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதன் காரணத்தினால் நிச்சயம் செய்யப்பட்ட இளைஞன் இலங்கைக்கு வருவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, யுவதியின் ஜாதகப்படி இந்த வருட இறுதிக்குள் திருமணம் செய்ய வேண்டுமென யுவதியின் பெற்றோர் தெரிவித்ததையடுத்து, சூம் தொழில் நுட்பத்தில் தற்போது தாலி கட்டி கொள்வதென்றும், அடுத்த ஆண்டில் பதிவுத் திருமணம் செய்து கொள்வதென்றும் தீர்மானிக்கப் பட்டு, நேற்று முன்தினம் இந்த திருமண நிகழ்வு நடந்தது.

இதன்படி சூம் தொழில்நுட்பத்தில் யுவதிக்கு, டென்மார்க் மாப்பிள்ளை தாலி கட்டியுள்ளார். (ம-3)

## பொது சுகாதார...

சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அம்பான்போல பகுதியில் உள்ள வீடொன்றிற்கு சென்று வீட்டில் உள்ளவர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்வதாக கூறி தூக்க மாத்திரை கொடுத்து பின்னர் வீட்டில் உள்ள பணம், நகை, பொருட்களை கொள்ளையடித்து சென்ற தாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

### மஹஜன சம்பத

திகதி 2020/10/30
சீட்டிழுப்பு இலக்கம் 4291
ஆங்கில எழுத்து — வெல்லப்பட்ட இலக்கங்கள்
Z 0 8 3 0 0 4
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2020.10.30
சீட்டிழுப்பு இலக்கம் - 335
A 13 33 49 73
ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கங்கள்

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB
சீட்டிழுப்பு திகதி 30-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2586
ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கங்கள்
W 15 31 39 50
தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 30/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0716
லக்கினம் — வெற்றி இலக்கங்கள்
மீனம் 15 18 21 27

### மெகா பவர்

திகதி 30/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0658
வெற்றி எழுத்து — சுப்பர் இலக்கம் — வெற்றி இலக்கங்கள்
J 19 30 39 40 60

## ஊரடங்கின்...

சம்பவம் தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

திருமண விழாவிற்கு கிட்டத்தட்ட 35 விருந்தினர்கள் கூடியிருந்தனர். மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்ட போதிலும் திருமணம் எப்படி நடந்தது என்பது குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவின்போது திருமணங்கள் மற்றும் இறுதி சடங்குகள் உட்பட அனைத்து பொது விழாக்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் முன்பு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கஞ்சாவுடன்...

800 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் நேற்று மாலை மேற்கொண்ட திடீர் சோதனையின்போது முச்சக்கரவண்டி ஒன்றில் கடத்தி வரப்பட்ட 5 கிலோ 800 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை கடத்தி வந்த மன்னார்; புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த 37 வயது உடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரும் மீட்கப்பட்ட கஞ்சாவும் முருங்கன் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3,60)

## நாட்டின் தற்...

சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் பல நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள பொது சுகாதார பரிசோதகர் சங்க தலைவர் உபுல் ரோகண, கொரோனாவை கட்டுப்படுத்துவது குறித்த கரிசனைகள் உருவாகியுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

பிசிஆர் பரிசோதனை முடிவுகள் வெளியாவது மூன்று நாட்களுக்கு மேல் தாமதமாகியுள்ளது.

இதுகுறித்து கேள்வி எழுப்பி வேளையே பிசிஆர் சோதனை இயந்திரம் பழுதடைந்துள்ளமை தெரிய வந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபைக்குள் பலர் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்களை சோதனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். நோயாளிகளுடன் தொடர்பிலிருந்தவர்களை கண்டுபிடிப்பது கடினமாக காணப்படுகின்றது.

குறிப்பாக மக்கள் நெரிசலாக வாழும் பகுதிகளில் இந்த நிலை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழில் பல்வேறு...

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கோவிட் - 19 தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் ஒன்று மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் க.மகேசன், மாவட்ட மேலதிக அரச அதிபர் எம்.பிரதீபன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், வட மாகாண உளநல சேவை பணிப்பாளர் கேசவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்ட கட்டளை தளபதி, உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

- ◆ திருமணம் - வீட்டில் நடத்த 50 பேருக்கு அனுமதி வழங்கப்படும். (வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருவோர் கலந்து கொள்ளத் தடை)
- ◆ இறுதிச் சடங்கு - 25 பேர் அனுமதி (2 தொடக்கம் 3 நாட்களில் நிறைவுறுத்த வேண்டும்) (வெளி மாவட்டங்களில் இருந்து வருவோர் கலந்து கொள்ள வருகை தருவது தடை)
- ◆ நடைபாதை வியாபாரம் - மரக்கறி வியாபாரத்திற்கு மட்டும் அனுமதி
- ◆ தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கத் தடை.
- ◆ திறந்த சந்தைக்கு அனுமதி இல்லை.
- ◆ விளையாட்டு போட்டிகளை ஒத்தி வைக்க வேண்டும்.
- ◆ மக்கள் கூட்டங்களை, பொது நிகழ்வுகளை ஒத்திவைக்க வேண்டும்.
- ◆ பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகளுக்கு அனுமதி.
- ◆ உணவகங்களில் இருந்து உணவு உண்பதற்குத் தடை. (பொதிக்கு மட்டும் அனுமதி)
- ◆ வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தருவோர் கிராம அலுவலகர் ஊடாக பதிய வேண்டும்
- ◆ தொழிற்சாலைகளில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்து தொழில் புரிவோர், முடக்கப்பட பகுதிகளில் இருந்து வருகை தந்து பணி புரிவோருக்கு தங்குமிடம் உணவு வசதி ஏற்படுத்த வேண்டும்.
- ◆ அரச அலுவலகங்களில் அரச உத்தியோகத்தர்களுக்கு தகவல் திரட்டு செய்யப்பட வேண்டும்.
- ◆ முடக்கப்பட்ட இடங்களில் இருந்து வெளியிடங்களுக்கு செல்லத் தடை, முடக்கப்பட்ட பகுதிகளுக்குள்ளே குடும்பத்தில் ஒருவர் மட்டும் அத்தியாவசிய தேவைக்கு மட்டும் வெளியில் செல்லலாம்.
- ◆ அவசர தொலைபேசி உதவி இலக்கமாக 021 222 5000 செயற்படும்.
- ◆ அவசர நிலை கருதி ஒருங்கிணைத்த செயலகமாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் 7 நாட்களும் செயற்படும்.
- ◆ ஆலயங்களில் மதகுருமார்களுக்கு மட்டும் அனுமதி.
- ◆ ஆலயங்களில் அன்னதானங்களுக்கு தடை.
- ◆ பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்கான நேர்முகப்பரீட்சைக்கு கட்டுப்பாடுகளை கல்வித் திணைக்களம் மேற்கொள்ளும்.

மறு அறிவித்தல் வரை மேற்படி தீர்மானங்கள் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,33,101)

## 6 பேருக்கு...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் (நல்லூர்) ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் உடுவிலில் தாய் மற்றும் 10 வயதுடைய மகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (பேலியகொட மீன் சந்தையில் கணவர் முன்னர் தொற்று உறுதி செய்யப்பட்டு இப்போது சிகிச்சை பெற்று வருகிறார்.)

மாளிகாவத்தையில் வசிக்கும் பெண் தனது மகளுடன், உடுவில் அம்பலவாணர் வீதியில் உதயசூரியன் சந்தியில் வசிக்கும் தனது தாயாரின் வீட்டில் வந்து தங்கியிருந்த வேளை பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தனிமைப்படுத்தப்பட்டார்.

அவர்களிடம் நேற்று முன்தினம் மாதிரிகள் பெறப்பட்டன. அவை பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் நேற்று இரவு அவர்கள் இருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையில் வர்த்தகத்தில் ஈடுபடும் கணவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வரும் நிலையிலேயே பெண் தனது மகளுடன் உடுவிலில் உள்ள தாயார் வீட்டுக்கு வந்து தங்கியுள்ளார் என்று அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை, தாயார் மற்றும் சகோதரி தொடர்ந்து தனிமைப்படுத்தப்படுவதுடன், அவர்கள் மூவருக்கும் பிசிஆர் பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெள்ளவத்தையில் இயங்கும் யாழ். ஹோட்டல் உரிமையாளர் யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் (நல்லூர்) தங்கியிருக்கும் நிலையில் அவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அங்கு பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த இருவர், வேலணையில் ஒருவர் என்று 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்களில் 340 பேருக்கு நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அவர்களில் யாழ்ப்பாணத்தில் 6 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேருக்கும் மருதங்கேணி கோவிட் - 19 சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறுபவர்களும் என 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## ராஜஸ்தான் வெற்றி




## இலங்கையை...

மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தினை வந்தடைந்ததாக சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## 633 பேர்...

ளது.

இதன்மூலம் மினுவாங்கொட - பேலியகொட கொரோனா வைரஸ் பரவல் கொத்தணியை அடுத்து 6 ஆயிரத்து 946 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட 319 பேரில் 236 பேர் மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் 83 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 10 ஆயிரத்து 424 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

# பருத்தித்துறை, கரவெட்டி பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள்

## பொலனறுவை கொரோனா சிறப்பு வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பகுதிகளில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 3 பேரை பொலனறுவை கொரோனா சிறப்பு வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி, இராஜகிராமம், பருத்தித்துறை மற்றும் பொலிகண்டி பகுதிகளைச் சேர்ந்த 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

நாடாளாவிய கொரோனா சிறப்பு வைத்தியசாலைகள் முழுவதுமாக நோயாளர்கள் நிறைந்ததை அடுத்து தொற்று உறுதியானவர்கள் அவரவர் வீடுகளிலேயே தனிமைப்படு த்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந் தனர்.

இந்நிலையில் இவ்வாறு தொற்று உறுதியான மூவரையும்பொலன்றுவை கொரோனா சிறப்பு வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மாகாண சுகாதார சேவை திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-03)

# விசேட சுற்றிவளைப்பு ஆரம்பம்; சட்டத்தை மீறுவோர் கைதாவார்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறி மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியோரை கண்டுபிடிப்பதற்கான விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் நாளை மறுதினம் அதிகாலை 05 மணி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத் தப்பட்டுள்ளது

பொலிஸாரின் இந்த அறிவிப்பை மீறி பயணித்தவர்கள் மீண்டும் கொழும்பிற்குள் வரும் போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

எவரேனும் ஒருவர் புதன் அல்லது வியாழக்கிழமைகளில் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியிருந்தால், அவர்களுக்கு எதிராகவும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்படுமென அஜித் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

# கும்பாபிஷேகம் நிறுத்தம்

(இருபாலை)

யாழ். வண்ணை வெங்கடேஷப் பெருமாள் கோவிலில் எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெற இருந்த பாலஸ்தான கும்பாபிஷேகம் கோவிட் - 19 காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் திருவிளக்குப் பூஜையும் நிறுத்தப்பட்டுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவரால் அறி விக்கப்பட்டுள்ளது. (ம-03, 136)

### அடுத்த வாரம் முதல்

# யாழ். மருத்துவ பீடத்தில் மீண்டும் பி.சி.ஆர் சோதனை

## புதிய இயந்திரங்கள் வாங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் அடுத்த வாரம் முதல் மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் கொரோனாத்தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ். போதனா வைத்திய சாலையில் மாத்திரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுவதனால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற் கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற் கான கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகளை அடுத்த வாரம் முதல் ஆரம்பிப்பதற்கு அந்தக் கூட்ட த்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பி.சி.ஆர் பரிசோதனைகளுக்குத் தேவையான மாதிரிகளை மாகாண சுகாதாரத் திணை க்களத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்வது எனவும், ஆய்வு நடவடிக்களுக்கான நுண்ணுயிரியல் சிறப்பு ஆலோசனைகளை வழங்குவதற்கும், தேவையான உயிரியல் காப்பு முறைகளைக் கண்காணித்து, அறிவுறுத்தல் வழங்குவதற்கு யாழ். போதனாவைத்தியசா லையின் ஒட்டுண்ணியியல் நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி ரஜந்தி இராமச்சந்திரன் செயற்படுவார் என்றும், உயிரியல் மற்றும் ஆய்வு கூடக் கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றும் பணியை யாழ். போதனா வைத்தியசாலை மேற்கொள்ளும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்யப்பட முடியும். இதனை 180 ஆக அதிகரிப்பதற்காக, ரூபாய் 50 இலட்சம் பெறுமதியான புதிய பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா இந்தக் கூட்டத்தில் உறுதியளித்துள்ளார். (ம-03,18)


**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், கரந்தன் சந்தி, ராசா கடை வீதியில் 8 பரப்புக் காணி ஆனந்தகானம் பகுதியில் விற்பனைக்கு உண்டு. 1 பரப்பின் விலை 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் (450,000/-). தரகர் தேவையில்லை.

தொடர்பு 077 109 3479 (4511)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், ஊரெழு, ஆனந்தகானம் மெயின் றோட்டில் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 4 இலட்சம் ரூபாய் (400,000/-). தரகர் தேவையில்லை.

தொடர்பு 076 888 4625, 077 998 6806 (4511)

**வேலை வாய்ப்பு**

அலுவலக உதவியாளர் தேவை. தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை. (4509)

076 788 9697

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், ராச வீதியில் மெயின் றோட்டுடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு 077 805 1655, 076 640 0974 (4493)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், கரந்தன், நீர்வேலி மேற்கு. ராசா கடை வீதியில் (ராசா கடை அருகாமையில்) 8 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 8 இலட்சம் ரூபாய் (800,000/-). தரகர் தேவையில்லை.

தொடர்பு 077 623 4204 (4511)

**வீடு விற்பனைக்கு**

பிரம்படி 2ஆம் ஒழுங்கை கொக்குவிலில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு (4510)

076 702 3565

**லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?** காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

**அமெரிக்க அதிஸ்ட விசா**



2022ல் நீங்களும் அமெரிக்காவில்...



18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

0768226241

55000 இலவச விசாக்கள்

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

எந்தவித எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் V2 Travels ல் பதிந்தோம் இன்று அமெரிக்காவில் வாழ்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்த V2 Travels க்கு எமது நன்றிகள். (C-505)

இன்னும் 08 நாட்களே உள்ளது



பிரகாஷ் - குடும்பம்

அமெரிக்கா விசா வெற்றியாளர்

விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**பௌதிகவியல்**

T.K.KAJAN B.Sc

077 653 1177 (4508)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

பிரான்ஸ் / ஜெர்மனி நெதர்லாந்து / சுவிஸ்

1150 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)

**வேலையாட்கள் தேவை**

நெல்லியடியில் இயங்கிவரும் குளிர்பான விற்பனை நிலையத்திற்கு வேலை செய்வதற்கு (ஆண்/பெண்) வேலையாட்கள் தேவை. வயதெல்லை (25 தொடக்கம் 35 வரை ) விரும்பத்தக்கது. (C-603)

077 296 7938


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.